Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | வைகாசி 28 | 11 - 06 - 94 | சனிக்கிழமை | ஓசை 113

## நான்கு மாத காலத்தில் 2388 வழக்குகள் பதிவு

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து ஏப்ரல் மாதம் வரை 2388 வழக்குகள் யாழ். மாவட்ட நீதிமன்றங்களில் பதிவாகியுள்ளன. இவற்றில், 1293 குடியியல் வழக்குகளும் 1095 குற்றவியல் வழக்குகளும் அடங்கும். இதுவரை பதிவாகியுள்ள குடியியல் வழக்குகளில் 259 வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், பதிவாகியுள்ள குற்றவியல் வழக்குகளில் 737 வழக்குகளுக்கு தீர்ப்புகள் வழங்கப் பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

[தி], [பா]

# வடமேல் மாகாண முதலமைச்சர் பிரேமச்சந்திராவுடன் புலிகள் இரகசியப் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தவில்லை!

(யாழ்ப்பாணம்)

வடமேல் மாகாண முதலமைச்சர் பிரேமச்சந்திராவுடன் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களோ, விசேட பிரதிநிதிகளோ இனப்பிரச்சினை குறித்து இரகசியப் பேச்சுவார்த்தை எதையும் நடத்தவில்லை என விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வப் பேச்சாளர் தெரிவித்தார். வடக்கு-கிழக்குப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவருவது தொடர்பாக விடுதலைப்புலிகளின் விசேட பிரதிநிதிகளுடன் தான் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அதில் முன்னேற்றம் காணப்படுவதாகவும் பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளமை உண்மைக்கு புறம்பானது எனவும் அவர் மேலும் கூறினார்.

வடமேல் மாகாண முதலமைச்சர் பிரேமச்சந்திரா ,லங்கா தீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டிஒன்றில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக விடுதலைப் புலிகளின் விசேட பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அதில் முன்னேற்றம் காணப்பட்டதாகவும், தெரிவித்துள்ளமை தொடர்பாக கருத்துத்தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதேசமயம், திரு. பிரேமச்சந்திரா வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவரும் நோக்குடன் விடுதலைப் புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தைமுழுக்கவனத்தையும் ஈர்த்திருப்பதாகவும் அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் என்றும், இப்பேச்சுக்கள் பூரண வெற்றி அளிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், இப்பேச்சுவார்தைகளின் முழு விபரமும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு தெரியப்படுத்தியிருப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மேல் மாகாண ஆளுநர் டி. பி. யால் பதவி நீக்கம்!

## கடிதம் மூலம் பதவி விலகப் பணிப்பு

(கொழும்பு)

மேல்மாகாணசபை ஆளுநர் எஸ். சர்வானந்தா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இவரை பதவியிலிருந்து நீக்குவதாக தெரிவிக்கும் டி.பி· விஜேதுங்காவின் கடிதம் விசேட பிரதிநிதி ஒருவர் மூலம் நேற்று பகல் 1.30 மணி'பளவில் ஆளுநர் சர்வானந்தாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனையடுத்து அவர் அலுவலகத்திலிருந்து வெளியேறினார்.

## புதிய ஆளுநர் சுவாமிநாதன்

(கொழும்பு)

மேல்மாகாண ஆளுநராக சட்டத்தரணி டி. என். சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் மேல் மாகாண ஆளுநராக பதவி வகித்த எஸ். சர்வானந்தாவை ஜனாதிபதி டி. பி. விஜே

## யப்பானில் பேச்சுகள் நடத்த அரசு, புலிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் யப்பானில் கூடி சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட முன்வரவேண்டும் என கொழும்பிலுள்ள யப்பானிய தூதரக பொறுப்பதிகாரி கோஷிமோட்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பான தனது அழைப்பை இலங்கைக்கான யப்பானியத் தூதுவர் வெளிவிவகார அமைச்சிற்கு அனுப்பி வைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவர் இது தொடர்பாக விடுத்த செய்தியில் சிறிலங்கா அரசிடமிருந்து இதற்கான பதிலைத் தான் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். தூதுவரின் அழைப்புக் கடிதம் சிறிலங்கா ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்காவிற்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுவிட்டதாக வெளிவிவகார அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் பார்வை படாத இடத்தில் வைத்து இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கூடிப் பேசினால் அது ஆக்க பூர்வமானதாக இருக்கும் என யப்பானியத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மந்திரிசபை விஸ்தரிப்பு; செலவினம் அதிகரிக்கும்

### மத்தியவங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

மிகவிரைவில் மேற்கொள்ளப்படும் மந்திரிசபை விஸ்தரிப்பினால் ஏற்படும் செலவினத்தை தாக்குப்பிடிக்கும் அளவு தாரம் இல்லை என மத்திய வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதுள்ள 83 அமைச்சர்களுக்கும் மேலாக

மணிபளவில் ஆளுநர் சர்வானந்தாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனையடுத்து அவர் அலுவலகத்திலிருந்து வெளியேறினார்.

நேற்றுக் காலை ஜனாதிபதியின் செயலாளர் கே.எச். ஜே. விஜேதாசா தொலைபேசியில் ஆளுநர் சர்வானந்தாவை அழைத்து பதவிவிலகுமாறு கேட்டுக்கொண்டார். ஆனால், 'தவறு செய்யாத நான் பதவியை இராஜினாமாச் செய்ய தயாராக இல்லை. வேண்டுமானால் ஜனாதிபதி என்னை அழைத்து பதவிவிலகுமாறு கோரப்பட்டதற்கு தெளிவான காரணத்தைக் கூறினால் மட்டுமே நான் பதவி விலகுவேன் எனவும், அல்லது போனால் ஜனாதிபதி அவராகவே பதவி நீக்கம் செய்யட்டும். ஆனால் நான் பதவி விலக தயாராக இல்லை என ஆளுநர்சர்வானந்தாதெரிவித்ததாக அறியவருகின்றது.

இதனைத் தொடர்ந்தே

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பதவிக்குரிய மரியாதையை ஜனாதிபதி வழங்க தவறிவிட்டார்

## பதவி நீக்கப்பட்ட ஆளுநர் சர்வானந்தா

''எனது பதவிக்குரிய மரியாதையை அரசு வழங்கத் தவறியபோதிலும் அதன்மீது எதுவித நடவடிக்கையையும் எடுக்கநான் விரும்பவில்லை'' இவ்வாறு மேல் மாகாண சபையின் ஆளுநர் எஸ. சர்வானந்தா நேற்று இரவு பி. பி. ஸி. தமிழோசைக்கு வழங்கிய தொலைபேசிப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய பேட்டியின் முழு விபரமும் வருமாறு:

ஜனாதிபதியிடமிருந்து எனக்கு கிடைத்த கடிதத்தில் தான் தனது அதிகாரத்தைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணசபையை கலைக்கவே ஆளுநர் பதவி நீக்கப்பட்டார்

## எதிர்க்கட்சி பா. உ. கூறுகிறார்

(கொழும்பு)

மேல் மாகாணசபை ஆளுநரை பதவி நீக்கியதற்கு மேல்மாகாண சபையைக் கலைக்க இருப்பதே காரணம். இதனை ஒருஜனநாயக விரோதச்செயல் என பாராளுமன்ற எதிர்க்கட்சிபிரதமகொறடா அத்தாவுட செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

அரசாங்க கட்சி இன்று ஆட்சிவெறியில் உள்ளது எனவும் அதற்காக எதனையும் செய்ய தயாரான நிலையிலேயே இன்றைய அரசாங்கம் இருப்பதையே மேல்மாகாண சபை நடவடிக்கை தெளிவாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

# முடிந்தால் மேல்மாகாண சபையை கலைத்து தேர்தலை நடத்துங்கள்

## சந்திரிகா குமாரணதுங்கா சவால்

(கொழும்பு)

ஐ. தே. க. அரசுக்கு இயலுமானால் மேல்மாகாண சபையைக் கலைத்து தேர்தலை நடத்தலாம் என மேல் மாகாணசபை முதல் அமைச்சர்சந்திரிகா குமாரணதுங்கா, சுதந்திரக்கட்சி கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்ணான்டோபிள்ளை ஆகியோர் அரசாங்கத்திற்கு சவால் விட்டுள்ளனர்.

நாம் எந்த நேரமும் தேர்தலை சந்திக்க தயாராக இருக்கிறோம். தென்மாகாண சபைத் தேர்தலில் மக்கள் புக

(6 ஆம் பக்கம் பார்க்க)

வகித்தஎஸ்.சர்வானந்தாவை ஜனாதிபதி டி. பி. விஜே

(6ஆம் பக்கம் பார்க்க)

தான் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யப்பானியத்

ரிப்பினால் ஏற்படும் செலவினத்தைதாக்குப்பிடிக்கும் அளவுக்குசிறிலங்காவின்பொருளா

தற்போதுள்ள 83 அமைச்சர்களுக்கும் மேலாக அண்

(6ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினையை தீர்க்குமாறு

# தொண்டா - அஷ்ரப் கோரிக்கை

## தன்னாட்சி வட்டாரக் குழுக்களுக்கு சிபார்சு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண்பதற்கு வழிவகுக்கும் முறையில் பெரிதும் உகந்த தன்னாட்சி உடைய வட்டாரக் குழுவை அமைக்கும்படி இலங்கையின் இரு முக்கிய சிறுபான்மை இன அரசியல் கட்சிகளான இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரசும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமானும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம் எச். எம். அஷ்ரப்பும் சிறிலங்கா ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்காவிடம் இவ்வேண்டுகோளை விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வட-கிழக்கில் பெருமளவு சட்டம் இயற்றும் அதிகாரங்களும், செயலாட்சி அதிகாரங்களும் நிர்வாக அதிகாரங்களும் உடைய வட்டாரக் குழு ஒன்றிற்கு அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அங்கீகாரம் வழங்க வேண்டும் என இவர்கள் முன்வைத்துள்ள திட்டம் கூறுகின்றது. கிழக்கிலும் வடக்கின் சில பகுதிகளிலும் வாழும் சிறுபான்மையன முஸ்லிம் மக்களின் அச்சங்களைப் போக்குவதற்காக வட்டாரக்குழ அமைப்பிற்குள் நிலப்பரப்பாட்சி உரிமையுள்ளகுழ ஒன்று (Territorial Cou cil) அமைக்கப்படல் வேண்டும் என்றும் வடக்கு கிழக்குக்கு அருகேயுள்ள சிங்கள மக்களின் அச்சங்களை

(6ஆம் பக்கம் பார்க்க)

### பொலிஸ் பலி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா பொலிசாருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலின்போது ஒரு பொலிசார் கொல்லப்பட்டதாக சிறிலங்கா இராணுவத்தினரை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

# புலிகளின் இலக்கு மீது குண்டு வீச்சு தொடர்கிறது

(கொழும்பு)

திருமலை, அம்பாறை, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய இலக்குகள் மீது தாம் விமானத் தாக்குதல்களை நடாத்தி வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைக் குழு அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக இம் மூன்று மாவட்டங்களிலும் ஊர்ஜிதம் செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீதே தாம் விமானப்

(6ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு



வீரவேங்கை நிரோஜா

யாழ். மாவட்டத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற எதிர்பாராதவிதமான வெடி விபத்து ஒன்றின்போது வீரவேங்கை நிரோஜா (ஐயாத்துரை நளாயினி - தெல்லிப்பழை, தற்போதைய முகவரி சுதுமலை வடக்கு, மானிப்பாய்) என்ற பெண் போராளி

(6ஆம் பக்கம் பார்க்க)

### இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடை பெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# முல்லையில் புக்காரா இரவுநேர தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அலம்பில், நாயாறு போன்ற பகுதிகள் மீது சிறிலங்கா விமானப்படையினர் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை நடாத்தப்பட்ட இத் தாக்குதலின் போது பொது மகன் ஒருவர் காயமடைந்துள்ளார். மாலை 7.10 மணியளவில் மேற்படி பகுதி மீது நடாத்திய குண்டுத் தாக்குதலையும் ரொக்கட் தாக்குதலையும் தொட

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**சாரதா**

கலை இலக்கிய சஞ்சிகை. அடுத்த இதழ் கோமல் சுவாமிநாதன் பேட்டியுடன் இலங்கைச் சிறப்பிதழ். எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8472)

**கஜு விதை விற்பனை**

கஜு (மரமுந்திரிகை) விதை (கோதுடன்) விற்பனைக்கு உள்ளது. மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்: பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், யாழ்ப்பாணம். (சி- 9642)

**புலமைப்பரிசில்பயிற்சி**

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரி பயிற்சி வெளிவந்து விட்டது. புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளை முழுமையாகத் தழுவியது. 10 மாதிரிப் பயிற்சிகளையும் (விடைகளுடன்) 20 நவீனகட்டுரைகளையும் உடையது. புதிய கல்வி நிலையத்திலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் (8510)

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**

உங்கள் கண்களை சரியாக பரிசோதித்து உடன் கண்ணாடி வழங்கப்படும். இல 288 நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (8513)

**தவறி விட்டது**

கடந்த 5- ஆம் திகதி யாழ் கந்தர்மடம் மணல் தறை ஒழுங்கைப் பகுதியில் இல. 571281481V அறிமுக அட்டை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மைக்கல் வேதநாயகம் பெர்ணான்டோ 580, ஆஸ்பத்திரி வீதி முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-9644)

**இறைச்சிக் கோழி**

புறொயிலர் இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு காலை 7.00 மணி முதல் 11-00 மணி வரை சுத்தம் செய்து கொடுக்கப்படும் (வெலிங்டன் சந்தி வடக்கு வீதி). 382


# கணக்குகளை சீர்செய்வதில் புனர்வாழ்வு பகுதியினர் அசமந்தம்

### கூட்டுறவுச்சபை அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டபலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சீர்செய்வதில் யாழ். புனர்வாழ்வுப் பகுதியினர் அக்கறையற்றுக் காணப்படுவதாகவும் இதன் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய பெருந்தொகைப் பணம் புனர்வாழ்வுப் பகுதியில் முடங்கிக் கிடப்பதாகவும் யாழ். கூட்டுறவுச் சபையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் 31-3-1993 திகதிக்குப் பின்னர் யாழ். புனர்வாழ்வுப் பகுதியினர் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சீர் செய்யவில்லை. இதனால் பெருந்தொகைப் பணம் முடங்கிக் கிடப்பதோடு, சங்கங்களுக்கு பாரிய நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால் யாழ்.மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களினால் சீரான உணவு விநியோகத்தை மேற்கொள்ள முடியவில்லை என்றார். (தி)

## யாழ். பல்கலைக்கழக அணி ஹொக்கியில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் பரியோவான் கல்லூரிக்கும் இடையில் கடந்த புதன்று இடம் பெற்ற ஹொக்கி ஆட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணி 6-0 என்ற கோல் கணக்கினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த ஹொக்கி ஆட்டித்தில் யாழ் பல்கலைக்கழக அணியின் சார்பில் விளையாடிய வி. சிவகுணன் அபாரமாக விளையாடி 5 கோல்களைப் போட்டார். இவ் ஆட்டத்தில் பரியோவான் கல்லூரிக்கு என். நவகோபனும், யாழ் பல்கலைக்கழக அணிக்கு எஸ். நோபிள் சுரேந்திரனும் தலைமை தாங்கினர். (5)


யாழ் மாநகரசபை

**பொது அறிவித்தல்**

**பகிரங்க ஏலவிற்பனை**

பின்வரும் பொருட்கள் யாழ். மாநகரசபை நல்லூர் அலுவலக வளவில் வைத்து 23,06.94 ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது? ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் கேள்விப்பிணையாக ரூபா 50/- ஐ 21.06.94 ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு முன் செலுத்தி மாநகரசபையுடன் தம்மைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களை மாநகர சபை வளவில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**பொருட்கள் விபரம்**

01. வெற்றுக் கொள்கலன்கள்
02. பழைய போத்தல்கள் (625 மி.லீ)
03. பாவித்த துவிச்சக்கர வண்டிகள்
04. கூட்டல் இயந்திரங்கள்
05. தட்டெழுத்து இயந்திரங்கள்.

மாநகர அலுவலகம் யாழ்ப்பாணம். 09.06.1994.

மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம்.

(சி-9634)


## மெய்வல்லுநர் போட்டிகள்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி வசந்தன் அரங்கில் 13ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறுகின்றது. பருத்தித்துறை பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வே.தி. செல்வரட்ணம் தலைமையில் நடைபெறும் இம் மெய்வல்லுநர் போட்டிகளிலே முதன்மை விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமியும் சிறப்புவிருந்தினர்களாக ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன், பருத்தித்துறை மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. மலையான், மாணவர் அமைப்பு மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி கரிகாலினி, உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆ. இராசேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். [25]

## இரட்டைச் சூட்டடுப்பு

தீவகக் கோட்டத்திலிருந்து இடம்பெயர்ந்தும் ஸ்ரீபன் குடியிருப்பில் வாழும் குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியினரால் சடனடிப் படையில் இரட்டைச் சூட்டடுப்புகள் கட்டி வழங்கப்பட்டன.

கடனடிப்படையில் இரட்டைச் சூட்டடுப்புக் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் முதல் நடவடிக்கையாக இவர்களுக்கு இவை கட்டிக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சண்டிலிப்பாயில் சுகாதார வாரம்

(தொல்புரம்)

வலிதென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் 1994 ஆம் ஆண்டிற்கான ''சுகாதார வாரம்'' கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இன்று 11 ஆம் திகதியிலிருந்து ஒருவாரம் வரை நடாத்தப்படவுள்ள மேற்படி சுகாதார வார நிகழ்வின் போது சிரமதானப்பணிகள், இலவச வைத்திய முகாம் அமைத்தல், இடம் பெயர்ந்தோர் முகாம் பரிசீலனை செய்தல், பாலர் பாடசாலை சிறுவர் நிகழ்ச்சிகள், சுகாதாரக் கருத்தரங்குகள் போன்ற பலவேறு நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

ஆரம்ப நாளான இன்று சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் ஆலயத்தின் சுற்றாடல்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல், செப்பனிடல் போன்ற அரும்பணிகள் பிரதேச செயலகத்தைச்சார்ந்த தொண்டர்கள், கிராமசேவை அலுவலர்கள் உட்பட ஏனைய ஊழியர்கள் சகிதம் வலிதென்மேற்கு பிரதேச செயலர் திரு. து. வயித்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

12 ஆம் திகதி இலவச வைத்திய முகாம் அமைத்தலும், 13, 14, 15 ஆம் திகதிகளில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட இடங்களில் அமைந்துள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் சுகாதாரப் பரிசீலனைகள் நடாத்தப்படும். இந்நிகழ்வில் கிராமசேவையாளர்கள், சுகாதாரப்பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

## பிறப்புபத்திரம்

## நினைவு கூருகின்றோம்... 11 061-994

1986-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலை-புகையிரதநிலையத்தில் வைத்து சிறிலங்கா ஊர்க்காவற் படையினரால் கடத்திச்செல்லப்பட்டுக் காணாமற் போன 04 தமிழர்கள்.

மட்டு-கிரான்குளம் முகாமில் வைத்து இந்தியப் படையினரால் கொலை செய்யப்பட்ட குருமண்வெளியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1989-ம் ஆண்டு தேசவிரோதசக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**சுப்பையா நிக்கலஸ்** (உக்கிளாய்-வவுனியா)

தேசவிரோதசக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட வவுனியா-உக்கிளாயைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1990-ம் ஆண்டு மட்டு-களுவாஞ்சிக்குடியில் சிறிலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**கபூர்** (முகம்மது அலியார் முகம்மது சலீம்-காங்கேயன்ஓடை-மட்டு)

**சபேசன்-வெசன்** (சாமித்தம்பி துரைரத்தினம் -தம்பலவத்தை, மண்டூர்-மட்டு)

**நவயுகன்** (தம்பாப்பிள்ளை திருச்செல்வம்-கொக்கட்டிச்சோலை-மட்டு)

**கிறோ** (கொத்தியர் புலவு-மட்டு)

**வசந்தராஜ்** (கோயில்போரதீவு-மட்டு)

**விமலநாதன்** (பாக்கியராசா ரவி-மகிழவெட்டுவான் -மட்டு)

மட்டு-கல்குடாப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**தாஹிர்** (முகைதீன் பாவா அன்சார்-திருகோணமடு -பொலநறுவ)

மட்டு-தம்புறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.மார்ஷல்** (மார்க்கண்டு நமசிவாயம்-கிண்ணியடி-மட்டு)

**2-ம்லெப்.சதீபன்** (- பாக்கியராஜா-விளாவெட்டுவான்-மட்டு)

**சகுந்தர்** (சுப்பிரமணியம் பஞ்சலிங்கம்-கோரக்கல்லிமடு-மட்டு)

**பரசு** (செல்வராசா-சந்திவெளி-மட்டு)

**செந்தில்** (-- கிண்ணியடி-மட்டு)

**ஹரி-கிரி** (பூபாலப்பிள்ளை செல்வராஜா-மன்னம்பிட்டி-பொலநறுவ)

கலவரத்தின்போது திருமலை சென்று காணாமல் போன மட்டு-வாழைச்சேனையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991-ம் ஆண்டு முல்லைத்தீவு - அரியகுண்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.சூரி** (காளிமுத்து காமராஜா-வற்றாப்பளை, முள்ளியவளை-முல்லைத்தீவு)

**ரசித்** (சண்முகராசா பன்னீர்ச்செல்வம் - மயில்வாகனபுரம் பிரமனந்தனாறு-விசுவமடு)

1992ஆம் ஆண்டு யாழ். வலிகாமம் வடக்குப் பகுதியில் நான்கு முனைகளில் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் வழுதி-மென்டிஸ்-மெல்மன்** (விக்கிரமசிங்கம் வியோகானந்தராசா அம்பாறை)

**2-ம் லெப். இளையவன்-பாலன்** (கனகசபை குணராசா - பாலமுனை மட்டு)

**அரசப்பன்** (யோ. தயாளன் இம்மானுவேல்-புனிதமரியாள் வீதி, சில்லாலை - பண்டத்தரிப்பு)

மட்டு - சித்தாண்டியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,


தமிழீழக் கலைஞர்கள், நண்பர்கள் இணைந்து நடாத்தும் நாட்டுப்பற்றாளர் அமரர் து. நித்தியானந்தன் (நித்தி) அவர்களின்

# நினைவஞ்சலிக் கூட்டம்

7.00 மணி முதல் 11-00 மணி வரை சுத்தம் செய்து கொடுக்கப்படும் (வெலிங்டன் சந்தி வடக்கு வீதி). 382 மணிக் கூட்டு வீதி யாழ்ப்பாணம்- (8524)

## EASY ENGLISH

ஆங்கிலம் இலகுவல் கற்க, கற்பசக T. M அன்ரனிப்பிள்ளை LL. B. எழுதிய ''ஈசி இங்கிலீஸ்'' (EASY ENGLISH PART I - V) தொகுப்பு பெரும் துணைபுரியும். ஆசிரியரின் புதிய வெளியீடாக 'ஈசி லற்றீன் எக்ஸ்பிறசன்ஸ்' (Eosy Latin Expressions) ஆங்கிலம், தமிழ்மொழி பெயாப்புடன் வெளிவந்துள்ளது. (சி-9637)

## சலனம்

உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8471)

## துளிர்

தமிழ் நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது. (8474)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறோயிலர்இறைச்சிக்கோழி உடன் விற்பனைக்கு உண்டு. எந்நேரமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் ஆஷா கோழிப் பண்ணை, 1ம் கட்டை, பருத்தித்துறை. (8523)

## தேவை

ஆங்கில மருந்து விற்பனை நிலையமொன்றுக்கு Sales girl தேவை தொடர்பு: Medi Ocean Palaly Road, Urumpirai (8517)

தமிழீழக் கலைஞர்கள், நண்பர்கள் இணைந்து நடாத்தும்
நாட்டுப்பற்றாளர் அமரர் து. நித்தியானந்தன் (நித்தி) அவர்களின்

# நினைவஞ்சலிக் கூட்டம்

**இடம்:** இளங்கலைஞர் மன்ற மண்டபம், நல்லூர்.
**காலம்:** 11-06-94 சனிக்கிழமை மாலை பி. ப. 4-00 மணி
**தலைவர்:** திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள்
(தலைவர், இளங்கலைஞர் மன்றம்)

நாதாஞ்சலி

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| என். கே. பத்மநாதன் | கே நித்தியானந்தன் |
| கே. ஆர். சுந்தரமூர்த்தி | பி. கணேசன் |
| வீ. கே. கானமூர்த்தி | என், ஆர். எஸ். ரவீந்திரன் |
| வீ. கே. பஞ்சமூர்த்தி | என். ஆர். எஸ் சுதாகரன் |
| ஆர். கேதீஸ்வரன் | எஸ். ராமதாஸ் |

நினைவுச் சுடரேற்றம்
திரு. பொ. புலவர் அவர்கள் (புலவர் வீடியோ)
திரு. இ. மனோகரன் அவர்கள் (மனோ லைற்)

மௌனாஞ்சலி

தலைமையுரை

கவிதாஞ்சலி; கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள்

அஞ்சலி உரைகள்

| | |
|---|---|
| ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் | பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் |
| வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப் அடிகள் | (தலைவர், நுண்கலைத்துறை: யாழ்/பல்கலைக்கழகம்) |
| பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் (தலைவர், தமிழ்த்துறை. யாழ் / பல்கலைக்கழகம்) | கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் (தலைவர், இராமநாதன். நுண்கலைக் கல்லூரி) |
| திரு. மு. கண்ணன் அவர்கள் (இசையமைப்பாளர்) | திரு. வீ. கே. பஞ்சமூர்த்தி அவர்கள் (நாதஸ்வர வித்துவான்) |
| திரு. எஸ். பாலசிங்கம் அவர்கள் (செயலாளர், அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்) | திரு. க. சோமசுந்தரம் அவர்கள் (மகாராணி) |
| திரு. சு. கணபதிப்பிள்ளை அவர்கள் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், சங்கீதம்) | ந. வீரமணி ஐயர் அவர்கள் (இயலிசைவாரிதி) |
| திரு. இ. ஜெயராஜ் அவர்கள் (அமைப்பாளர், கம்பன் கழகம்) | திரு. ஜவான் அவர்கள் (பொறுப்பாளர், நிதர்சனம்) |

திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள்
(பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம்)

கீதாஞ்சலி

மெல்லிசைப் பாடகர் எஸ். ஜீ. சாந்தன் குழுவினர் வழங்கும்
"நித்தி நினைவுப் பாடல்கள்"
பிரபல ஒலி அமைப்பாளர் நித்தி அண்ணரின்
ஆத்மா சாந்திக்கு பிரார்த்திப்போமாக!

அன்பளிப்பு:
மறைந்த தவில்மேதை என். ஆர். சின்னராசாவின் புதல்வர்கள்
**N. R. S. ரவீந்திரன், N. R. S. சுதாகரன் - இணுவில்**
(சி/9640)

பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (41)

## பிறப்புபத்திரம் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ். செயலக பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 1-8-1954 ஆம் திகதிக்குப் பின்பு பதிவு செய்யப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் மறு அறிவித்தல் வரும்வரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என யாழ் மேலதிகமாவட்டப்பதிவாளர் திரு. அ. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பிறப்பு எழுதும் பத்திரம் முடிவடைந்துள்ளதாகவும், கொழும்பில் இருந்து பத்திரம் வந்ததும் விண்ணப்பம் ஏற்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (24)

## 'மண்ணின் கனவு' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

து. வைத்திலிங்கம் எழுதிய 'மண்ணின் கனவுகள்' சிறுகதைத் தொகுதி இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் எதிர் வரும் 19 ஆம் திகதி ஞாயிறன்று வெளியிடப்படும்.

திரு. வரதர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் திரு. சோ. பத்மநாதன் திரு. எஸ். டிவகலாலா ஆகியோரின் மதிப்புரையும் இடம் பெறும். (தி)

## சத்துணவு வழங்கல்

வலி மேற்குப் பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப் பட்டு வரும் போஷாக்கு வாரத்தில் அப்பகுதி கர்ப்பிணித் தாய் மார்கட்கும், ஒரு தொகுதி முன்னிலை பாலர் பாடசாலை சிறுவர்கட்கும் வழங்கும் முகமாக 250 ஜீவாகார சத்துணவு பொதிகளை மகளிர் அபிவிருத்தி நிலையம் வழங்கியுள்ளது.

மரியாள் வீதி, சில்லாலை - பண்டத்தரிப்பு)

மட்டு - சித்தாண்டியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். சர்வேஸ்வரன்-விஜி** (ஆறுமுகம் சின்னத்துரை - மாவடிவேம்பு - மட்டு)

**தேவகுரு-சாள்ஸ்** (விஸ்வநாதன் சிவகுமார் - முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

வலிகாமத்தில் பல பாகங்களிலும் தொடர்ச்சியான வான் தாக்குதலாலும், கடற்படை பீரங்கித் தாக்குதலாலும் முள்ளானையில் 03 பேரும், விளானில் 4 பேரும், மாதகலில் ஒரு சிறுவனும், இளவாலையில் ஒருவருமாக கொல்லப்பட்ட 09 தமிழர்கள்,

1993-ம் ஆண்டு கிளாலிக்கடற்பரப்பில் பயணிகள் படகு சேவையில் மக்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது சிறிலங்காக் கடற்படையினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். கேணல் புலேந்திரன்-சாள்ஸ்** (ஆனந்தராசா தவராசா-கடலூர்-திருமலை)

**லெப். மகான்** (நவரட்ணம் தவராசா - வவுனியா- த.மு: நல்லூர் வடக்கு-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்** (சி-9636)

## 2 ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு: | | வீரச்சாவு: |
|---|---|---|
| 12 | | 03 |
| — | | — |
| 09 |  | 06 |
| — | | — |
| 1969 | | 1992 |

**லெப். ஈழவன் (பிறேம் மாஸ்டர்)**
**(ஐயாத்துரை சண்முகேஸ்வரன்)**
திதி: 11-06-1994

கிழக்கு வெளுக்கிறது கீழ்வானம் சிவக்கிறது
உனக்கு பிடித்த தமிழீழம் மலர்கிறது
செருக்கு பிடித்தவர்கள் சென்னி சரிகிறது - உன்
மருப்பு ஒடித்த கரம் மலராய் தெரிகிறது.

- குடும்பத்தினர்

''கௌரி இல்லம்'' தேவரையாளி,
நெல்லியடி, வடக்கு. (8526)

## மருதங்கேணி கோட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் சங்கீதம், நடனம், சித்திரம் மற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இக்கல்விக் கோட்டத்தில் பத்து ஆரம்ப ஆசிரியர்களுக்கும் சங்கீதம் நடனம், சித்திரம் பாடங்களுக்கு எட்டு ஆசிரியர் வெற்றிடம் இருந்து வருகிறது.

அதே சமயம் இக் கோட்டத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மேசை, கதிரைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

## வேலை நிறுத்தத்தினால் புகையிரத சேவை பாதிப்பு

[கொழும்பு]

இலங்கை புகையிரத திணைக்கள ஊழியர்கள் கடந்த புதனன்று நடத்திய வேலை நிறுத்தத்தினால் தெற்கில் முழு புகையிரத சேவைகளும் ஸ்தம்பித நிலையடைந்துள்ளது.

புகையிரத திணைக்கள மருதானை எரிபொருள் நிரப்புப் பகுதி ஊழியர்கள் புதனன்று காலை எட்டுமணிக்கு வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இதனால் பிரதான புகையிரத சேவை எட்டு உட்பட நூற்றி முப்பத்தி ஐந்து புகையிரத போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பித நிலை அடைந்தது. இதனைத் தொடர்ந்து மக்கள் தமது போக்குவரத்திற்கு மிகுந்த கஷ்டங்களை எதிர் நோக்கினர்.

## சந்திரிகா தனது போக்கினை மாற்றிக்கொள்ள வேண்டும்

### வடமேல் மாகாணசபை முதலமைச்சர் பிரேமசந்திரா

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகாகுமாரணதுங்கா மேல் மாகாண சுகாதார அமைச்சர் பிரேமசந்திர குணசேகரவை (ஜனநாயக ஐக்கிய தேசியகட்சி உறுப்பினர்) நீக்கிவிட்டு வேறு ஒருவருக்கு அப்பதவியை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிகிறேன். அவர் அவ்வாறு செய்யமுற்பட்டால் எமது வட மேல் மாகாணசபையில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மூவரையும் வெளியேற்ற வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படலாம். எனவே சந்திரிகா தனது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும். இதற்கு இருவார அவகாசம் வழங்கியுள்ளேன். நாம் சுதந்திரக்கட்சித்தலைவி சிறிமாவோடுதான் உடன்படிக்கை செய்துள்ளோமே தவிர சந்திரிகாவுடன் அல்ல. இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும் வடமேல் மாகாண சபை முதலமைச்சருமான ஜி.எம்.பிரேமசந்திரா தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து வெளியிடுகையில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டே அப்போது பதவியில் இருந்து கொண்டே அரசுக்கு எதிராக செயற்பட்டோம் எனவே அதற்கு முடிவுகட்டும் வரை நாம் கட்சியை கலைக்கப் போவதில்லை. வேறு கட்சியுடன் இணையப்போவதுமில்லை எனவும் குறிப்பிட்டார்.

# பாசையூர் புனித அந்தோனியார் திருவிழா

# சிறப்பு மலர்

### பங்குத்தந்தையின் ஆசிமொழி

பல்லாயிரக்கணக்கான பக்த கோடிகளுக்கு புதுமை வள்ளலாக அருள்மாரி பொழியும் பாசையூர் புனித அந்தோனியார் பதியிலே வாழும் கிறிஸ்தவர்களுக்கு இன்று மகிழ்ச்சிகரமான நன்னாளாகும். இந்நன்னாளிலே இப்பகுதி வாழ் கிறிஸ்தவ மக்களின் பங்குத்தந்தை என்ற வகையிலே, ஒரு சில வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று இவ்வாலயமானது கோடானுகோடி பக்தர்களைக் கொண்டு புனித அந்தோனியார் அருள் வரம்பெற்று பல கோடிக்கணக்கான புதுமைகளைச் செய்து, பக்தர்களைத் தன்வசம் இழுத்துக் கொண்டு, அபயம், ஆறுதல் தேடி வரும் மக்களை அரவணைத்து, தினம், தினம் கண்ணீரும் கம்பலையுமாய் தஞ்சம் தேடிவரும் மக்களுக்கு அருள் வரம் அள்ளிக் கொடுக்கின்றார்.

போர்க் கால சூழ்நிலையிலும், விமானத் தாக்குதல், ஷெல் அடி, பீரங்கிப் படகின் அடிகள் மத்தியிலும், மக்கள் கும்பல், கும்பலாக வருவதைக் கண்டு நான் பெருமிதம் அடைகின்றேன்.

சாதி மத பேதமின்றி, மக்கள் ஒரு குலமாக இறைவனை வழிபட இவ்வாலயம் வருகின்றனர். வழிபாடுகள் அனைத்தும், இறைவனின் வார்த்தையை மையமாகக் கொண்டு நடைபெற்றன. எமது மேய்ப்புப் பணி மகாநாட்டில் எடுத்த எமது முதல் தீர்மானம் கிறிஸ்தவ மக்கள் அனைவரும் இறைவனின் வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதை எமது இல்லங்களில் வைத்து வாசித்து தியானித்து, எமது குடும்பங்களில் வாழ்வது இவ்வார்த்தைதான் எமது கிறிஸ்தவ விழுமியங்களை நாம் வாழவும், மற்றவர்களுக்குச் சாட்சியாக வாழவும் வழிவகுக்கின்றது.

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து அருளப்பர் நற்செய்தி 8 :31 - 32 வசனத்தில் கூறுகின்றார் நீங்கள் என் சீடராய் இருப்பீர்கள் உண்மையை அறிவீர்கள அவ்வுண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும். இறைவனில் நிலைத்திருக்கும் உண்மையான சீடத்துவ வாழ்வுக்கு நாம் அழைக்கப்படுகின்றோம்.

உண்மையை அறிவீர்கள் எனது உண்மை



## புனிதர் வாழ்வில்...

கடல் அலைகள் கொஞ்சும் பாசையூர் பதியில் கோயில் கொண்டிருக்கும் கோடி அற்புதராம் - புனித அந்தோனியார் திருவிழாவை அவ்வாலயப் பங்கு மக்களும் குடாநாட்டில் பல பகுதியிலும் வாழும் கோடி அற்புதரின் அருள்நிறை அடியார்களும் கடல் கடந்து வாழும் பாசையூர் மக்களும் கூட தமது ஆழ்ந்த விசுவாசத்தின் வெளிப்பாடாக கொண்டாடுகின்றார்கள். துன்புற்றோருக்கு துணையும் ஏழைகளுக்கு றக் கேட்டுக் கொண்டார் திருக் எல்லோரும் வியக்கும் முறையில் அதை செய்து முடித்தார் அன்றே வேதப்படிப்பை கற்றுக் கொள்ள உத்தரவு பெற்றார்- பின்னர் ஊர் ஊராய் சென்று பாவிகளை மனம் திருப்பினார் அனேக பதிதரை மெய்மறையில் சேர்த்தார்- இவரிடம் புதுமை செய்யும் வரம் இருந்ததினால் ஏராளமான பேரை - இறைவன் திருவழியில் நெறிப்படுத்தினார் சிலுவை அடையாளத்தினால் ஏராளமான நோ

### யாழ். மறைமாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி



யாழ் மறைமாவட்டத்தின் முக்கிய திருத்தலங்களுள்ஒன்றாக மிளிருகின்ற பழமை வாய்ந்த பாசையூர் புனித அந்தோனியார் திருப்பதியின் திருவிழா சிறப்பாக ஆன்மீகத்தின் அடியொற்றிக் கொண்டாடப்படும் இவ்வேளையில் இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து நானும் மகிழ்கின்றேன்.

அவலங்களும், அழுகுரல்களும் எமது பகுதியிலே நிறைந்திருந்தாலும் இறையன்பு எம்மை விட்டு அகலவில்லை, இறைமக்களின் விசுவாச வாழ்வு தளர்வுற்றுப் போகவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக இந்தப் புனித விழா அமைகின்றது.

இறைபணியாளர் அந்தோனியார் இறைவனின் வார்த்தையை ஏற்று, அதனை வாழ்ந்து இறைவனுக்கு மகிமையைக் கொண்டுவந்தவர். தனது தியாகத்தாலும், அருங்குறிகளாலும் இறையன்பை மக்கள் சுவைக்க வழி செய்தவர். இறையன்பை நாளும் சுவைத்துக் கொண்

## எழுதுவினைஞர் சேவைக்கு மேலும்நியமனம்கிடைக்கும்

அரசியலுக்கும், பொதுசன அலுவல்களுக்குமாக நியமிக்கப்பட்ட மந்திரி சபை குழுவின் விதப்புரைகளைக் கவனத்திற்கு எடுத்து, சில தீர்மானங்களை மந்திரிசபை எடுத்திருக்கின்றது என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

1992 இல் நடைபெற்ற எழுதுவினைஞர்களுக்கும். அத்தோடு இணைந்த சேவைகளுக்குமான போட்டிப் பரீட்சையில் பரீட்சார்த்திகளால் தெரிவிக்கப்பட்ட விருப்புரையின் அடிப்படையில் நியமனம் செய்வதற்கு ஏற்பட்டுள்ள 'அநீதிகளை நீக்குதல்' கவனத்திற்கு எடுக்கப்பட்டு, பின்வரும் நடைமுறைகளை ஏற்றுக்கொள்வதற்கு மந்திரி சபையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய பதவிகளுக்கு விருப்புரிமை தெரிவித்தவர்கள அவைகளுக்குத் தேவையான ஆகக் குறைந்த அளவு புள்ளிகளைப் பெற்றிருந்தால் இணைந்த சேவையில் எழுதுவினைஞர் பதவிக்கு நியமித்தல்.

குறிப்பிட்ட திணைக்கள விருப்புரிமைகள் தெரிவித்தவர்கள் அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்குத் தேவையான குறைந்த அளவு புள்ளிகளைப் பெற்றிருப்பின் இணைந்த சேவையில் எழுதுவினைஞர் பதவிக்கு நியமித்தல்;

விருப்புரிமை ஏதும் தெரிவிக்காதவர்களை இணைந்த சேவையில் எழுதுவினைஞர் ... தப்பட்ட பொதுசேவை ஆணைக்குழுவிற்கு அதன்படி ஆலோசனை வழங்குதல்;

மேற்குறிப்பிட்ட மந்திரி சபை தீர்மானங்களுக்குஅமைவாக விருப்புரிமைகளை மாற்றுவதற்குத் தேவையான புள்ளிகளைப் பெற்றிருப்பவர்கள் தங்களது விருப்புரிமைகளை மாற்றி விண்ணப்பங்களை ஆங்கிலத்தில்இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு உடனடியாக அனுப்பும்படி கேட்கப்படுகின்றனர்.

### ஊக்குவிப்புக் கடன்

சுயதொழில் வாய்ப்பை ஊக்குவித்து பொருண்மியத்தை மேம்படுத்தும் நோக்குடன் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் அண்மையில் வேம்பிராய் கிராமத்தில் நடைபெற்ற கிராமியப்பாசறையின் போது அக்கிராமத்தில் 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒருவருக்கு தலா 10 000 ரூபாவீதம் கடன்கள் வழங்கப்பட்டன.

இதேபோல் கடந்த 20ஆம் திகதி தென்மராட்சிக்கோட்ட சாவகச்சேரி வட்டத்தில் 15 பயனாளிகளுக்கு இவ்வாறு கடனுதவி வழங்கப்பட்டமை

திருக்கும் உண்மையான சுதந்திர வாழ்வுக்கு நாம் அழைக்கப்படுகின்றோம்.

உண்மையை அறிவீர்கள் எனது உண்மையான வாழ்வு உங்களுக்கு விடுதலையை அளிக்கும். இந்த விடுதலைக்காகவே நாம் ஏங்குகின்றோம். இறைவனுடைய வார்த்தை உங்களுக்கு விடுதலையை அளிக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்.

இறுதியாக, இப்பாரிய பணியிலே, எனக்குத் துணை நின்ற உள்ளங்களை அன்போடும், பண்போடும், நினைவு கூருகின்றேன். முதற்கண் எனது பங்குச்சபை உறுப்பினர்கள் திருவிழாவுக்கான பல ஆயத்தங்களையும் செய்து, திருநாளைச் சிறப்பித்தமைக்காக எனது நன்றியை சமர்ப்பிக்கின்றேன். அடுத்து, வழிபாட்டுக் குழுவினர் இந்த ஒன்பது நாளும் வழிபாடுகளைக் கருத்துடன் ஆயத்தம் செய்து, மக்கள் உள்ளங்களைப் பக்தி பரவசத்தில் ஊக்குவித்தமைக்கு நன்றி நவில்கின்றேன். ஒன்பது நாள் நவநாளில், மறையுரையாற்றி மக்கள் மனங்களை இறைவன் பால் திருப்பி, அவர்களுக்கு ஊக்கமளித்த அருட்தந்தை லெம்பேட் அடிகளாரை நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றேன் பல்வேறு வழிகளிலே, எமக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து உதவிய சகல குழுக்களுக்கும் ஆலயத்தின் வளர்ச்சி எம் வளர்ச்சியே என்று எமக்கு தாராளமாக பண உதவி தந்த எம் அன்புப் பங்கு மக்கள் பக்தி சபைகள் அனைத்திற்கும் என் உள்ளம் நிறைந்த நன்றிகள்.

எமது ஆலயத்தின் வளர்ச்சி நம் பங்கு வாழ் மக்களின் வளர்ச்சியாக அமைந்திட புனித அந்தோனியாரிடம் அருள் வேண்டி நிற்கின்றேன்.

இ. ஜோ. ஜெயக்குமார்
பங்குத் தந்தை

பாடாக கொண்டாடுகின்றார்கள். துன்புற்றோருக்கு துணையும் ஏழைகளுக்கு ஆதரவும், அண்டிவந்தோருக்கு அடைக்கலமும், தேடி வந்தோருக்கெல்லாம் இறையருளின் உறைவிடமாய் திகழ்கின்றார் புனிதர்.

இவர் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு ஆவணி 15இல் பக்தியுள்ள கிறிஸ்துவ பெற்றோருக்கு தலைமகனாகப் பிறந்தார். திருமுழுக்கு அருள்சாதனத்தில் இவருக்கு இவர் பெற்றோர் இட்ட பெயர் - ''பெர்தினந்து'' சிறு வயதிலேயே புனித வாழ்வில் ஆர்வம்கொண்டு புனித அகஸ்தீனார் சபையில் சேர்ந்தார் அங்கே உத்தமராய் ஒழுகிய பின்பு, மிகுந்த ஆர்வத்துடன் திருமறையை போதிக்கவும், கடினமான துறவற வாழ்வை வாழவும் யேசுவுக்காக ஒரு மறை வேதசாட்சியாக மரிக்கவும் மிகுந்த ஆவல் கொண்டவராய் புனித அசிசியரால் கவரப்பட்டவராய், புனித பிரான்சிஸ் அசிசியான் சபையில் சேர்ந்தார்.

ஒருநாள் மடத்துத்தலைவர் இவரை திரு மறைஉரை ஆற்றவன் திருவழியில் நெறிப்படுத்தினார் சிலுவை அடையாளத்தினால் ஏராளமான நோயாளிகளை குணப்படுத்தினார்- கபடமாய் கொடுத்த நஞ்சைக் குடித்தும் இவர் சாகவில்லை- பாவிகள் இவர் செய்த அருள் உரையை புறக்கணித்த போது கடற்கரைக்கு சென்று மச்சங்களுக்கு போதிக்கவே அவைகளும் கரைக்கு ஓடிவந்து அவர்காலடியில்நின்றன. இவர் பக்தி பரவசமாய் செபத்தில் ஆழ்ந்திருந்தபோது யேசு குழந்தை வடிவாய் இவருக்குதோன்றினார் இவர் வாழ்நாள் முழுவதும் கற்புநெறியைக் கடைப்பிடித்து வந்தமையால் கற்புக்கு அடையாளமான லில்லிமலருடன் இவர் காட்சி தருகின்றார்.

இவருடையபெரும்பான்மையான திருப்பணிகள் பதுவை நாட்டிலேயே நடந்தபடியால் இவரை பதுவைப் புனிதர் என்று அடியார்கள் அன்புடன் அழைப்பர். இறைவனுக்காக, அதிக வீரத்துடனும், ஆர்வத்துடனும் அயராது பாடுபட்டு உழைத்தமையாலும் - கடும் தவம் செபத்தில் தொடர்ந்து ஈடுபட்டமையால் இவர் நோய்உற்றவராய்தமது 36வது பராயத்தில் 1231ல் இறைவன் அடிசேர்ந்தார், இவர் இறந்து ஒருவருடத்திற்குள்ளேயே பல நூற்றுக்கணக்கான அற்புதங்கள் இவர் ஆற்றல் பொருந்திய பரிந்துரையால் நடந்தபடியால் இவர்துரிதமாக புனிதநிலைக்கு உயர்த்தப்பட்டார்.

இவர் திருவிழா நிகழும் ஆனி மாதம் 13ம் திகதி நினைவு கூரப்படுகின்றது. அன்று திருவிழா திருப்பலி யாழ் ஆயர் அவர்களால் காலை 6.30 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நிறைவேற்றப்படும். அந்தோனியார் பரிந்துரையில் ஆண்டவன் அருளை பெற அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திறையன்பை மக்கள் சுவைக்க வழி செய்தவர். இறையன்பை நாளும் சுவைத்துக் கொண்டிருக்கின்ற நாமும் இவவேளையில இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். இந்த விழா எமது விசுவாச வாழ்வை இன்னும் உறுதிப்படுத்தட்டும். இறைவனுடைய அன்பின் அரசின் பண்புகளை வளர்த்து அன்புச் சமுதாயமாக, இறை மக்களாக நாம் வாழ இது வழி வகுக்கட்டும்.

அந்தோனியாரின் பக்தர்கள் அனைவர் மேலும் இறைவன் தன் ஆசீரை நிறைவாக அருள்வாராக.

† Thomas Saundaranayagam

விக்காதவர்களை இணைந்த சேவையில் எழுதுவினைஞர் பதவிக்கு நியமித்தல்; சம்பந் பயனாளிகளுக்கு இவ்வாறு கடனுதவி வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# துணைவேந்தர் நிதிக்கு 40ஆயிரம் ரூபா அன்பளிப்பு

## வடமராட்சி மக்கள் வழங்கினர்

(பருத்தித்துறை)

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் துரைராஜா நிதியத்திற்கு வடமராட்சி மக்கள் 40,000 ரூபாவை வழங்கியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவின் சேவையைப் பாராட்டி வடமராட்சி மக்களால் நடாத்தப்பட்ட விழாவிற்கு வடமராட்சி மக்கள் சேகரித்த பணத்தின் ஒரு பகுதியான 40,000 ரூபா பாராட்டு விழாக்குழுவினால் துணைவேந்தர் துரைராஜா நிதியத்திற்கென யாழ். பல்கலைக்கழக பதிவாளரிடம் வழங்கப்பட்டது.

பல்கலைக்கழக பதிவாளர் இப்பணத்தினைக் கையளித்த விழாக்குழுப் பொருளாளர் திரு.சதா.காந்திதாசன் மூலம் வடமராட்சி மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார். (25)

# மாணவர் கல்வியை தொடர உடற்பயிற்சி அவசியம்

## மருதங்கேணி கோட்ட பிரதிப்பணிப்பாளர்

(வடமராட்சி)

பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்கள் தனியே வகுப்பறைக்கல்வியோடு மட்டும் நில்லாமல் இணைபாடவிதானக்கல்வியை பெறவேண்டும்.

இவ்வாறு உடுத்துறை மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி, அதிபர் திரு. பொ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது மருதங்கேணி கல்வி கோட்ட பிரதிப்பணிப்பாளர் திரு. வை. செல்வராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடும் போது ஒவ்வொரு மாணவர்களும் ஆரோக்கியமாகவும் உடல்வலு உள்ளவர்களாகவும் இருந்தால் தான் வகுப்பறைக் கல்வியைப் பெறக் கூடியதாக இருக்கும். இதனால் தான் காலையில் பாடசாலைகள் ஆரம்பமாக முன்னர் மாணவர்களுக்கு உடற்பயிற்சி வழங்கப்படுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெறா திருந்த உடுத்துறை மகாவித்தியாலய விளையாட்டுப்போட்டி இம்முறை மிக சிறப்பாக நடைபெறுவதையிட்டுமகிழ்கிறேன். இப்பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும் குறுகிய காலப் பகுதியில் இவ்விளையாட்டுப் போட்டியை மிகவும் சிறப்பான முறையில் நடத்தியமை பாராட்டுக்குரியது. இப்பாடசாலை மேன்மேலும் வளர்ச்சி அடைவதற்கான நடவடிக்கைகளை அதிபரும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் மேலும் முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்றார். பாடசாலை அபிவிருத்திச்சபைச் செயலாளர் திரு. வி. எஸ். தியாகராசாவும் உரையாற்றினார்.

விளையாட்டில் வெற்றி பெற்றவீரர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார். (யோ)


**G. C. C. வைத்திய ஆலோசனை நிலையம்**
514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ். அரச வைத்தியசாலை பழைய O. P. D. முன்பாக)

**12.6.94 ஞாயிறு பி.ப. 5.00 மணி**
திருப்பலி, தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் பவனியும் இடம் பெறும்
**13.6.94 திங்கள் காலை 6.30 மணி**
யாழ் ஆயர் அவர்களின் திருநாட் திருப்பலி தொடர்ந்து புனிதரின் தேர்ப்பவனியும் ஆசீர்வாதமும் இருக்கும்

**சாமினி இரும்பகம்**
242 A, அருச்சுனா வீதி
(ஸ்ரான்லி வீதி),
யாழ்ப்பாணம்.

**ஜெயா அழகு சாதன மாளிகை**
பெரியகடை.
யாழ்ப்பாணம்.

**ரேடியோ மனுவல்**
121, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கம்**
பாசையூர்

**M. அரியரட்ணம்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**அங்கலின் காமென்ஸ்**
43, 48, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

**பிரபா போட்டோ**
யாழ்ப்பாணம்.

**குமார் பாணகம்**
சென். செபஸ்ரியன் வீதி,
பாசையூர்.

**றியோ கிறீம் ஹவுஸ்**
75, பாங்க்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-9638)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் சுஜாத்தா**
**(யோகராசா அனுசுயா)**
திதி: 11-6-94

மலர்வு: 21-3-72 | வீரச்சாவு: 14-6-91

இச்சை போல் இருந்து வாழ
　ஈப்புழு எறும்பும் கோணும்
உச்சமாய் மனிதஜென்மம்
　சுதந்திர உணர்ச்சி இன்றி
நச்செனும் அடிமை வாழ்வை
　நயந்திட ஞாய முண்டோ
நிச்சய சபதம் பூண்டு
　சுதந்திரம் நிலைக்கச் செய்வோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

''தர்மவாசா''
திக்கம். (8518) - குடும்பத்தினர்

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ மண்ணில்:
05 - 01 - 1973

தமிழீழ மண்ணுக்காய்:
11 - 06 - 1992

**கப்டன் வழுதி (மெல்மன்)**
**(விக்கிரமசிங்கம் வியோகானந்தராசா)**

# சிந்திகவை கொல்ல உபாலி சோதிடரிடம் சென்றாராம்

## பொலிஸ் விசாரணையில் அம்பலம்

(கொழும்பு)

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் கடந்த மே 3 ஆம் திகதி நடைபெற்ற கொலை ஒன்றை மேற்கொள்வதற்காக சொத்தி உபாலியும் ஏனையவர்களும் சோதிடர் ஒருவரிடம் ஆலோசனை கேட்டனராம். இத்தகவல், பொலிஸார் சொத்தி உபாலியை விசாரணை செய்த வேளையில் வெளிவந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சொத்தி உபாலி தாம் நீதிமன்றத்தில் ஒரு கொலையை செய்யப் போவதாக அச்சோதிடரிடம் கூறவில்லையாம். பொலிஸாரின் விசாரணையிலிருந்து சொத்தி உபாலி தனது போட்டிக் கோஷ்டியின் தலைவனான சிந்திக அமரசிங்கவை கொல்ல நன்கு திட்டங்கள் தீட்டியதாகவும் சோதிடர் ஒருவருடன் கலந்தாலோசனை செய்ததாகவும் தெரிய வருகிறது.

மே 3 ஆம் திகதியன்று கொலை செய்யும் காரியத்திற்காக சொத்தி உபாலி பத்பெரியா, தட்டசோமே, சுனில், சிரிசார ஆகியோருடனும், மற்றிருவருடனும் லான்சர் கார் ஒன்றையும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் ஆட்டோ ஒன்றையும் வாடகைக்கு அமர்த்திக் கொண்டு சென்றனர்.

இக்கோஷ்டி உபாலி தலைமையில வத்தளையில் உள்ள விடுதி ஒன்றுக்கு சென்று மதுபானம் அருந்தி அன்று அங்கேயே தங்கியிருந்தனர். அங்கு தங்கியிருந்த போது நீதிமன்ற கொலைக்கு பயன்படுத்துவதற்கு உபயோகிக்கப்படவிருந்த சுழல் துப்பாக்கி பரீட்சித்து பார்க்கப்பட்டது தென்னை மரங்களை நோக்கி சுட்டு இப்பரீட்சிப்பு நடைபெற்றுள்ளது.

சிந்திக அமரசிங்க நீதிமன்றிற்கு அழைத்து வரப்பட்ட போது பத்பெரியா தனது சுழல் துப்பாக்கியால் சுட்டதில் சிந்திக காயமடைந்தார் இதில் சட்டத்தரணி ஒருவரும் காயமடைந்தார். பொலிஸார் பத்பெரியா தப்பியோடியபோது விரட்டிச் சென்று சுட்டுக்கொன்றனர்.

பத்பெரியா சிந்திகவை சுட்டுக்கொன்று விட்டார் என நம்பி சிலாபம் வீதியில் உள்ள போசனசாலை ஒன்றில் இருந்த சொத்தி உபாலிக்கு தொலைபேசியில் சிந்திக கொல்லப்பட்டார் எனவும் பத்பெரியாவும் கொல்லப்பட்டார் எனவும்சிரிசாரசுனில்என்பவர்கள் அறிவித்தனர். சொத்தி உபாலியும் ஏனையோரும் உடனடியாக கொழும்புக்கு புறப்பட்டனர் என விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

### நாட்டில் சுமுகநிலை ஏற்பட்டால்

# வடக்கு கிழக்கு பகுதி துரித அபிவிருத்தி காணும்

(மட்டக்களப்பு)

நாட்டில் சுமுக நிலை ஏற்பட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மிக விரைவில் அபரிமிதமான முன்னேற்றம் காணும். இந்த அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான நிதியை வழங்க வெளிநாடுகள் தயார் நிலையில் உள்ளன என்று கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின்ஆயர் அதிவண. கென்னத் பெர்ணான்டோ கூறினார்.

மேலும் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு அதன் மூலம் சமாதானமும் சக வாழ்வும் ஏற்பட நாம் முயற்சி செய்வோம். எந்த அரசு வந்தாலும் மக்களுக்குத் தேவையான நிலைப்பாட்டைச் சீர் செய்யப் போவதில்லை. வேலை வாய்ப்பு, வருமான அதிகரிப்பு, அபிவிருத்தி மற்றும் மனித மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்த நாம் நம்பிக்கை வைப்பதில் எதுவித பலனும் இல்லை என்றார்.

# விவசாயிகள் தற்கொலை ஆராய விசாரணைக் குழு

## பொலநறுவையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

விவசாயக் கடனை வங்கிகளுக்கு திருப்பியடைக்க முடியாத நிலையில் பொலநறுவை மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள விவசாயிகள் தற்கொலைகள் குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தனிநபர் ஆணைக்குழு ஒன்றினை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

விவசாய அபிவிருத்தி மற் ... மிக்கப்பட்டுள்ளார். 1994 ஜனவரிக்குப் பின்னர் பொலநறுவை மாவட்டத்தில் தற்கொலைகள் அதிகரித்துள்ளனவா? அவ்விதமாயின் அத்தற்கொலைகளுக்கான காரணங்களை அறிவிக்கவும் அத்துடன் இத் தற்கொலைகளுக்கும் அரச துறைக் கடன்வழங்கும் ஸ்தாபனம் எதில் இருந்தாவது கடன் பெற்று அக் ... கப்பட்டுள்ளது. ஆறு வாரங்களுள் அறிக்கை சமர்ப்பிக்க பணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொலநறுவை விவசாயிகள் தாம் செலுத்த வேண்டிய விவசாயக் கடன்களை அறவிட வேண்டாம் என அரசைக் கேட்டுக்கொள்ளும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று கடந்த செவ்வாயன்று நடைபெற்றது. பொலநறு

# 5 வலயங்களாக யுத்த பிராந்தியம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தபிராந்தியத்தை அரசு 5 பெரும் பிரிவுகளாக பிரித்துள்ளது. இப்பிரிவுகளுக்கு ஒவ்வொரு இராணுவ அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனுராதபுரம், வவுனியா, புத்தளம், மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு மேஜர் ஜெனரல் ஏ.எம்.ஜி. செனிவிரட்னவும், கிளிநொச்சி, பூநகரி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு பிரிகேடியர் ஜே பெர்னாண்டோவும், மணலாறு, திருமலைக்கு, பிரிகேடியர்சிறில் பீரிசும், மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டங்களுக்கு வஜிர விஜேரட்னவும் யாழ் குடாநாட்டிற்கு அசோகா ஜெயவர்த்தனாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வலுக்குறைந்தோருக்கான மறுவாழ்வு

வலுக்குறைந்தோர் மறுவாழ்வு இல்லம்

ஆதரவற்ற வலுக்குறைந்தவர்கள் சுயதொழில் பயிற்சி பெற்று மறுவாழ்வு பெற எம்மால் இல்லம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வில்லத்தில் தங்கியிருந்து மறுவாழ்வுபெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**நோயாளர் நலன்புரிச்சங்கசெயலகம்,**
**யாழ். அரசினர் பொது மருத்துவமனை.**

(8521)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1994-07-05-ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) விரிவுரையாளர் / தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்) - உடலமைப்பியல்/உடற்றொழிலியல் /ஒட்டுண்ணியியல்/சமுதாய மருத்துவம் / உயிரிரசாயனவியல்.

(2) உதவிவிரிவுரையாளர்/ தற்காலிக உதவி விரிவுரையாளர், (மருத்துவமல்லாத) உடலமை ...

... நிறைவேற்றும் படியாகமேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை கொடுப்பனவு செய்யப்படும்.

ஆ) ஒவ்வொருவருக்கும் ரூபா 10,000/- படியும், அத்துடன்ஆண்டு அடிப்படைச் சம்பளத்தினதும் நிலுவையிலுள்ள வேலைகள் நிறைவேற்றும் படியினதும் 10 சதவீதமும் புத்தக படியாக ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டு தவணைப் பணமாக செலுத்தப்படும்

இ) 1993 மே 12-ம்திகதிய 9/93 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்தபடியாகரூபா600/- செலுத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

## கப்டன் வழுதி (மெல்மன்)
### (விக்கிரமசிங்கம் வியோகானந்தராசா)
மட்டு / அம்பாறை

பலாலி இராணுவ முகாமிலிருந்து தச்சன் காட்டுப் பகுதியால் வெளியேறிய இராணுவத்தினரோடு நேரடிச் சமரில் வீரச்சாவடைந்தார். இவருடன் வீரச்சாவடைந்த இரு போராளிகளையும் நினைவுகூருகின்றோம்.

உன் பிரிவால் வாடும்

**அம்மா, உடன்பிறப்புக்கள், உறவினர்கள்.**

உடுவில்:- சித்தப்பா, சின்னம்மா குடும்பத்தினர்.

(8507)

---

## 6-ம் மாத நினைவஞ்சலி
11- 6- 1994



மலர்வு

25- 11- 1920

உதிர்வு

11- 12- 1993

### அம்புறோஸ்பிள்ளை
### பெனடிக்ற் பேரின்பநாயகம்

ஏற்றமிகு இனிய நல் ஏழாலையூரில்
ஆற்றல் மிகு அம்புறோஸ்பிள்ளை அன்பு மகன்
பெனடிக்ற்
போற்றத்தகு பேரின்பநாயகம் புகழொடு தோன்றி
இல்லறமுற எட்ணா நவமணியை காதலில் மணந்து
அன்பால் உருகி வாழ்வில் அறிவால் உயர்ந்து
மேன்மையுறு மக்கட் பேற்றில் மரியநாயகம், கருணை
இன்பமுடன் நேசம், இனிய மதுரம், தயாளம்
வானீர்த்த அருமை, ஓர் மகள் சாந்தி, ரூபன்
மீண்டும் பெற்றெடுத்த வசந்தன், இளையவன்
பாலன் அனைவரையும்
பார் போற்ற பெற்று வளர்த்து சென்றிட்டாயே.
உங்கள் ஆத்மா சாந்தி பெற ஆண்டவரை வேண்டுகிறோம்
உங்கள் நினைவில் கண்ணீர் சிந்தும்

ஏழாலை கிழக்கு. **மனைவி, பிள்ளைகள்**

ஏழாலை. [8522] **மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

---

ஆணைக்குழு ஒன்றினை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி ராஜாங்க அமைச்சின் செயலாளர் எச். எம். சி. கபிலரட்ன விசாரணை ஆணையாளராக நிய

---

## 'றிக்சோ'வில் பி. பி. ஸி. செய்தியாளர்

[யாழ்ப்பாணம்]

பி. பி. ஸி. செய்தியாளர் ''றிக்சோ'' வண்டியில் யாழ். நகரில் பவனி வருவதை அவதானிக்க முடிந்தது.

யாழ். நகரில் தங்கியுள்ள பி. பி. ஸி. செய்தியாளரும், ரொயிட்டர் செய்தியாளரும் றிக்சோ வண்டி ஒன்றில் யாழ். நகரப் பகுதிகளில் பயணம் செய்து பல பகுதிகளையும் பார்வையிடுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (க)

## புக்காரா நோட்டம்

(தொல்புரம்)

சிறிலங்கா விமானப்படையினரின் புக்காரா குண்டு வீச்சு விமானம் ஒன்று கடந்த வியாழனன்று மாலை 6-30 மணியளவில் சுழிபுரம், தொல்புரம், மூளாய், வட்டுக்கோட்டைப்பகுதிகளின் வான்பரப்பில் தாழப்பறந்து அங்குள்ள மக்கள் குடியிருப்புக்களை வட்டமிட்டு நோட்டம் இட்டுச் சென்றது. (41)

## சான்றிதழ்கள் கிடைத்தன

தொழில் நுட்ப கல்லூரியில் ஆங்கில தேசிய தராதரப் பத்திர பரீட்சையில் 1983 முதல் 1988 வரையான காலப்பகுதியில் சித்தியெய்தியவர்களின் மூலச் சான்றிதழ்கள் வந்து சேர்ந்துள்ளன. பரீட்சார்த்திகள் யாழ். தொழில் நுட்பக்கல்லூரி பதிவாளரிடம் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

---

கும் அரச துறைக் கடன்வழங்கும் ஸ்தாபனம் எதில் இருந்தாவது கடன் பெற்று அக்கடனை மீளச் செலுத்தமுடியாத காரணத்திற்கும் ஏதும் தொடர்புள்ளதா?

மேற்கண்ட இரு விடயங்களையும் ஆராய்ந்து அறிக்கை தருமாறு ஆணைக்குழு பணிக்

ளும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று கடந்த செவ்வாயன்று நடைபெற்றது. பொலநறுவையின் விகாரைகளிலும், பொது இடங்களிலும் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. ஆங்காங்கே சுலோக அட்டைகளும் காணப்பட்டன.

## துறைமுக வேலை நிறுத்தம்; பொருள்கள் வர தாமதம்
### நெருக்கடியை தவிர்க்க முயற்சி

(கொழும்பு)

கொழும்பு துறைமுக ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தத்தின் காரணமாக யாழ். மாவட்டத்திற்கான உணவுப் பொருள்களை ஏற்றி வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதனால் தற்போது எழுந்துள்ள உணவு நெருக்கடியை தவிர்க்கும் முயற்சிகளை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு மேற்கொண்டுவருகிறது

தற்போது துறைமுகத்திற்கு வெளியே தரித்து நிற்கும் கப்பலை வாடகைக்குப் பெற்று அதன் மூலம் திருகோணமலையிலிருந்து மாவினை ஏற்றி வருவதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது, இதற்கான நிதி காசோலையாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

### போசாக்கு குறைந்த
## மாணவர்களுக்கு சத்துணவு வழங்க நடவடிக்கை

பருத்தித்துறை பிரதேச சபை சத்துணவுவாரத்தையொட்டி பிரதேசசபைப் பகுதியிலுள்ள பாலர்பாடசாலைகளின் போசாக்குக் குறைந்த மாணவர்களுக்கு சத்துணவு வகைகளை வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. ஆ. சிவசுவாமியின் நடவடிக்கைகளையடுத்தே போசாக்கு குறைந்தபாலர் பாடசாலை மாணவர்களுக்கு இச் சத்துணவுவகைகள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது,

கடந்த திங்கட் கிழமை இத்திட்ட ஆரம்பவைபவம் இடம் பெற்றது. பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் திரு. ச. செவ்வந்திநாதர் இச்சத்துணவுவகைகள் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார். இச்சத்துணவுவகைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேச சத்துணவு கூடத்தினூடாக இலைக்கஞ்சி, பாம் போசா உட்பட சத்துணவுவகைகள் போசாக்குக் குறைந்தமாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. (25)

## மறுவாழ்வு இல்லம்

வலுக்குறைந்தோர்க்கான மறுவாழ்வு இல்லம் ஒன்றை யாழ் பொது மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கம் அமைத்துள்ளது. வலுக்குறைந்தோரை பராமரிக்கவும் சுயதொழில் பயிற்சி வழங்கவும் இவ்வில்லம் அமைக்கப்பட்டுள்ளது.

---

(2) உதவிவிரிவுரையாளர்/தற்காலிக உதவி விரிவுரையாளர், (மருத்துவமல்லாத) உடலமைப்பியல்/உடற்றொழிலியல்/ஒட்டுண்ணியியல்/சமுதாய மருத்துவம்/உயிரிரசாயனவியல்

**சம்பள அளவுத்திட்டம்**

(1) விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 6050—10X250
—8550/-
(மாதமொன்றிற்கு)
(மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 6050/- ரூபாவுக்கு இரண்டு படி அதிகமாக அதாவது 6,550/-ரூபா சம்பளத்தில் வைக்கப்படுவர்).

(2) தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்); ரூபா 6,550/- (நிலையானது) மாதமொன்றிற்கு.

(3) உதவிவிரிவுரையாளர்: (மருத்துவமல்லாத): ரூபா 5,270/- (நிலையானது)
மாதமொன்றிற்கு
(முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவுடன்) சித்தி பெற்றுள்ள பட்டதாரி ஒருவர், விரிவுரையாளர் (தகுதிகாண்) தரத்தில், ரூபா
6050 – 10X250
– 8550/-
மாதமொன்றிற்கு, சம்பள அளவுத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(4) தற்காலிக உதவி விரிவுரையாளர்:
ரூபா 5,270/- (நிலையானது)
மாதமொன்றிற்கு.

குறிப்பு:- இத்துடன்,

அ) 1994 திசெம்பர் 31-ம் திகதி வரை, நிலுவையிலுள்ள வேலைகளை

தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தாபனக்கிளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபா பெறுமதியான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23x10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்,

**குறிப்பு:**

மேற்படி விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும், கொழும்பு-13, ஆட்டுப்பட்டித் தெரு, 154ம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்,**
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994-06-06

(சி-9627)

சிந்தனைக்கு

சிலர் ஒருவருக்கு அஞ்சி நின்றதால் தைரியமுள்ளவர்களாக கருதப்பட்டு விடுகின்றனர்.
- தோமஸ் ஃபுல்லர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 11.06.1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

# சந்திரிகா தலைமை எதுவரையில்?

ஆட்சியுள்ள அரசாங்கங்களைக் குறை கூறுவதும், கண்டனம் செய்வதும் தாம் ஆட்சிக்கு வந்தால் அவர்கள் விட்ட தவற்றை நிவர்த்தி செய்வோம் என உறுதி கூறுவதும், வாக்குறுதி அளிப்பதும் ஜனநாயக நாடுகளில் வழமையான தொன்றுதான். அவ்வாறு கூறி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவர்களும் உண்டு

இந்வகையில்தான் தற்பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவியும், மேல்மாகாண சபை முதல்வருமான சந்திரிகா குமாரணதுங்காவும் பேசியுள்ளதைக் கொள்ள வேண்டும். இன்னும் இரண்டு மாதங்களில் வெளிவரவுள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் எதிர்காலத் திட்டம் தற்பொழுது இலங்கை எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் என தெரிவித்துள்ளார்.

இதில் ஒன்றாக வடக்கு- கிழக்கில் இடம்பெற்று வரும் பிரச்சினையும் விரைவில் தீர்க்கப்படும் எனக்குறிப்பிட்டார். ''தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் வழங்கும் திட்டம் ஒன்று எம்மிடம் உள்ளது. இப்பொழுது அதைத் தயாரித்து வருகின்றோம். பெரும்பான்மையினரின் உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், சிறுபான்மையினரின் கோரிக்கைக்கு இணங்கிச் செயற்படுவதற்குத் திட்டமிட்டுள்ளோம். இந்த யுத்தத்தை மேலும் வளர்க்கும் திட்டம் எம்மிடம் இல்லை'' என்பதே சந்திரிகா குமாரணதுங்காவின் அறிவிப்பாகும்

சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் இதுவரையில் பெரும்பான்மையினரின் உரிமைக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாமலே ஆட்சி நடத்தியுள்ளனர். இதனைச் சந்திரிகா குமாரணதுங்காவும் தமது எதிர்காலத் திட்டத்தில் உறுதிப்படுத்தியுள்ளார். பெரும்பான்மையினரின் உரிமைக்குப் பாதகம் ஏற்படாத

# கொழும்பு பங்குச் சந்தை தொடர்ந்து தேக்க நிலையில்

## அரசியல் உறுதியற்றதன்மை காரணமாம்

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை தொடர்ந்தும் மந்த கதியிலேயே காணப்படுகிறது. மிகக்குறைந்தளவு வர்த்தகமே இடம் பெற்றன என்பதை தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. பங்குகளை வைத்திருப்போர் அவற்றை விற்க ஆர்வம் காட்டியபோதும் கொள்வனவு மந்த கதியிலேயே இடம்பெற்றன. வெளிநாட்டு முதலீட்டாளர்களும் அதிக ஆர்வம் காட்டவில்லை.

கடந்தவார இறுதி நாளன்று அனைத்து பங்குகளினதும் விலைக்குறிகாட்டி 13 புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தது. அரசியல்ஸ்திரத்தன்மையின்மையினால் சந்தை நிலையில் தற்போதைக்கு தேக்க நிலைமையேகாணப்படுமெனக் கூறப்படுகிறது.

# பதவி நீக்கப்படுபவர் இடம் ஐ.ஐ.தே.மு. நிரப்பக்கூடாது

## ஜி. எம். பிரேமசந்திரா அறிவுறுத்து

(கொழும்பு)

மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கவினால் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட சுகாதார அமைச்சர் பிரேமரட்ன குணசேகரவின்இடத்தை மேல்மாகாண சபையில் உள்ள ஐ. ஐ. தே. மு. சார்பான எவரும் நிரப்ப முன்வரக் கூடாது என இம்முன்னணியின் அவசரக் கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கட்சி உறுப்பினர் எவராவது பதவியை ஏற்றால் அந்த உறுப்பினர்க்கெதிராக கட்சியின் செயற்குழு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் எனவும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மேல் மாகாண முதலமைச்சர் நடந்து கொண்டதைப் போல் நாங்கள் நடந்து கொள்ள மாட்டோம் ஜனநாயக வழியில் நடப்போம் சர்வாதிகாரி போல் நாம் நடக்க மாட்டோம் எனவும் அம்முன்னணியினர் குறிப்பிட்டனர்.

மாகாணசபை தேர்தலில் நாம் அளித்த ஆதரவினாலேயே சந்திரிகா பதவிக்கு வந்தார் அவர் இந்த நாட்டின் ஜனாதிபதியானால் என்ன நடக்கும் என்பதை நாம் யோசித்துப்பார்க்க வேண்டும் சந்திரிகாவின் சர்வாதிகாரப் போக்கு அம்பலப்படுத்தப்படும் எனவும் வடமேல் மாகாண முதலமைச்சரும் ஐ. ஐ. தே. மு. தலைவருமான ஜி. எம். பிரேமசந்திர தெரிவித்தார்.

# அமெரிக்க எஜமான் தெ. கொரியாவை பாதுகாக்கா

## வடகொரியா எச்சரிப்பு

(சியோல்)

பிறநாட்டு சதி நடவடிக்கைகளில் கூட்டுச் சேர்ந்து வடகொரியாவுக்கு எதிராக தடை உத்தரவுகளை பிறப்பிப்பதன் மூலம் பாதுகாப்பாக இருந்து விட முடியுமென தென்கொரியா எண்ணினால் அது தப்புக்கணக்காக முடியும் என வடகொரியா எச்சரித்துள்ளது.

தடையுத்தரவு என்றால் யுத்தமென கருதப்படும். யுத்தத்தில் கருணைக்கு இடமில்லை எனவும் வடகொரியா எச்சரித்துள்ளது.

வடகொரியா அதன் அணுசக்தி நிலையங்களை ஐ. நா பார்வையாளர்களின் பரிசோதனைக்கு இடமளிக்க மறுத்து வருவதனால் அமெரிக்கா ஐ.நா தடையுத்தரவை வடகொரியா மீது பிறப்பிக்க முயற்சித்து வருவது அறிந்ததே.

தென்கொரிய ஜனாதிபதி கிம் இல்சுங் என்ற பெர்மை உணர்ந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் அமெரிக்க எஜமானோ அதன் பட்டியட் ஏவுகணைகளோ பாதுகாப்புத்தரமாட்டாது என்பதையே என வடகொரியா எச்சரிக்கைசெய்துள்ளது,

# எனக்கெதிரான சதிகள்

# உறுதியுள்ள சந்ததியை உருவாக்கும் பூங்கா

## ஆண்டு விழாவில் பிரதேச செயலர்

(தென்மராட்சி)

எத்தனையோ இன்னல்களின் மத்தியிலும் எமது மண்ணை மீட்கும் போராட்டத்தை மட்டுமல்ல தேச நிர்வாகத்தையும் விடுதலைப் புலிகள் ஒன்றுசேர நிர்வகித்து வருகின்றனர் இது வரலாற்றில் எந்த விடுதலைப்போராட்டத்திலும் காணமுடியாதது என தென்மராட்சி பிரதேச செயலாளர் பு. சுந்தரம்பிள்ளை கடந்த வியாழனன்று நாவற்குழி கைதடி சிறுவர் பராமரிப்பு போசாக்கு பூங்காவின் முதல் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று இராணுவ நடவடிக்கையினால் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. எத்தனையோ சிறுவர்கள் போசாக்கின்மையால் பல தரப்பட்ட பகுதிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வேளையில் சிறுவர்களுக்கு இப்படிப்பட்ட பூங்காக்கள் எதிர்கால சந்ததியினர் உறுதிமிக்கவர்களாக அமைய வழிசெய்கின்றது.

இந்தப் பூங்காவில் சிறுவர்களை பராமரிக்கும் ஆசிரியர்கள் இவர்களைசிறந்த வழியில் வழிநடத்தி அவர்களை எதிர்காலத்தில் மிளிரச் செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம், மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி மாலினி, பூங்காவின் பொறுப்பாளர் பாரதியண்ணா ஆகியோரும் உரையாற்றினர். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# குண்டு வெடிப்பில் ஒரே குடும்பத்தினர் பலி

(கொழும்பு)

பந்துல்ல கிராமத்தில் கடந்த செவ்வாய் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

இவர்கள் மீன்பிடிப்பதற்காக அருகிலுள்ள குளத்திற்கு சென்றதாகவும் குளத்தின் ஓரத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றை எடுத்து ஆராய்ந்து கொண்டிருக்கையில் அதுவெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

## அரச பாடசாலைகளில்

# மாணவர்களை சேர்க்க விண்ணப்பிக்கலாம்

அரசாங்க பாடசாலைகளில் ஆண்டு ஒன்றுக்கு மாணவர்களை சேர்த்தல் தொடர்பான அரசவர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது' இது தொடர்பான விண்ணப்பங்களை அருகிலுள்ள பாடசாலை அதிபருக்கு அனுப்ப வேண்டிய இறுதி நாள் இம் மாதம் 30ஆம் திகதியாகும்.

அனுமதி பெறதகுதி பெற்ற மாணவர் 1995 ஜனவரி 31 ஆம் திகதி 5 வயது பூர்த்தியானவராக அதாவது 1990 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன் பிறந்தவராக இருத்தல் வேண்டும் இது தொடர்பான விண்ணப்பமாதிரியை ஈழநாதம் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும்

# பதவியை இராஜினாமா செய்யப்போவதில்லை

## - தேசியப் பட்டியல் எம். பி. ஒபேவன்ச

(கொழும்பு)

பாராளுமன்ற எம். பி.பதக. தேசியப் பட்டியல் எம். பி

இதனைச் சந்திரிகா குமாரணதுங்காவும் தமது எதிர்காலத் திட்டத்தில் உறுதிப்படுத்தியுள்ளார். பெரும்பான்மையினரின் உரிமைக்குப் பாதகம் ஏற்படாத வகையிலேயே வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என தமது எதிர்காலத் திட்டம் பற்றி அவர் தெளிவாக்கியுள்ளார்.

இந்தவகையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப் போகும் எதிர்காலத் திட்டத்தில் தமிழர் பிரச்சினைக்கு எந்தளவு ஏற்புடைய திட்டங்கள் முன்வைக்கப்படும் என்பது குறித்து பலமான கேள்வி எழுகின்றது. ஏனெனில் பெரும்பான்மை மக்களை திருப்திப்படுத்தும் தீர்வுத்திட்டம் எதுவும் தமிழ் மக்களை திருப்திப்படுத்த முடியுமா? என்பதே ஆகும்.

இனவெறி ஊட்டப்பட்ட பெரும்பான்மையினரிடம், இனப்பிரச்சினை தீர்க்கக் கூடிய தீர்வுத்திட்டத்திற்கு அங்கீகாரம் பெறுவது எப்படி? இனவெறிக்கும், ஒடுக்குமுறைக்கும் இன்னமும் தூபமிட்டுக் கொண்டிருக்கும் அரசியல் வாதிகளும், பௌத்த பிக்குகளும் இருக்கும் வரை அதற்கான சாத்தியம் எந்தளவு?

எடுத்துக்காட்டாக, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் யோசனைகள் வெளிவர முன்னரே தேசப்பிரதிநிதி என்னும் அமைப்பு பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு சிங்கள-பௌத்தர்கள் வாக்களிக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்துள்ளது. 'இந்து' பத்திரிகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அம்பாறை தவிர்ந்த கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணத்துடன் இணைப்பதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தயாராக உள்ளது என வெளிவந்த செய்தியே இக்கோரிக்கைக்குக் காரணமாகும்.

கரு உருவாகுவதற்கு முன்பே சருச்சிதைவு செய்து கொள்ள விரும்புபவர்கள் போன்று திட்டம் தயாராகும் முன்பே திட்டத்திற்கு எதிராகச் செயற்படுவர்களிடம் சம்மதம் பெற்று பிரச்சினையைத் தீர்ப்பதென்பது நடைமுறையில் எத்துணை சாத்தியமானது? இது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தன்னையும் ஏமாற்றித் தமிழரையும் ஏமாற்றும் செயலாகும்.

இந்நிலையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பிரச்சினையை உளப்பூர்வமாக தீர்க்க வேண்டும் எனக் கருதின் இது அதற்கான வழியல்ல. பிரச்சினையை மக்களிடம் விட்டுவிடாமல், தலைமையே முன் எடுத்துச் செல்ல வேண்டும். தமக்கு பின் மக்களை அணி திரட்ட வேண்டும். அதுவே தலைமைக்குரிய பண்பாகும். பிரச்சினையை மக்களிடம் கொடுத்துவிட்டு பின்னால் ஒளிந்து கொள்ளக் கூடாது. இது தலைமையின் ஆற்றலையும், ஆளுமையையும் வெளிப்படுத்தாது.

# எனக்கெதிரான சதிகள் தேர்தல் மூலம் தவிடுபொடி

## இடைத்தேர்தல் வெற்றி குறித்து ஜெயலலிதா

(சென்னை)

எனக்கு எதிரான சதி தவிடு பொடியாக நொறுக்கப்பட்டதைத் தான் இடைத்தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். மயிலாப்பூர், பெருந்துறை இடைத்தேர்தல்களில் அ. தி. மு. க. வெற்றிபெற்றது தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், எனக்கெதிராக மட்டுமல்ல தமிழகத்தை வஞ்சித்து வந்த காங்கிரஸ்கட்சியை இரு தொகுதிகளிலும் தோற்கடித்தது மட்டுமல்லாமல் கட்டுப்பணத்தையும் இழக்க மக்கள் செய்துள்ளனர். மூன்றாவது இடம்தான் காங்கிரஸ் கட்சிக்கு என்ற நிலையும் சென்று ஒரு தொகுதியில் நான்காவது இடம்தான் என்ற நிலைக்கு காங்கிரஸ் தள்ளப்பட்டது மக்கள் விடுத்த எச்சரிக்கையாகும். அடுத்து பொய் புனைந்துரைத்து என்னை வீழ்த்தலாம் என கனவு கண்ட கருணாநிதியை பொறுத்தமட்டில் மக்கள் மிகச் சரியாக அடையாளம் கண்டுள்ளனர். கருணாநிதி நம்பிக்கைக்கு உரியவரும் அல்ல, நாணயமானவரும் இல்லை என்ற நிலையில் இருந்து மக்கள் மாறிவிடவில்லை. மயிலாப்பூரில் வீழ்ந்தார் என்பது மட்டுமல்ல பெருந்துறை தொகுதியில் தான் ஆதரித்த வேட்பாளரை மூன்றாவது இடத்திற்கு கொண்டு சென்றுவிட்ட புண்ணியமும் அவருக்குண்டு.

அவரோடு ஏற்பட்ட மோதலால் தனிக் கட்சி ஆரம்பித்தவரும் அவதூறுகளை அள்ளிவீசுவதே அரசியல் என்ற பாணியில் தேர்தலில் ஈடுபட்ட ஒரு திடீர் தலைவரும் இனி தலை தூக்க முடியாத அளவுக்கு தன் கட்சியை ஓட்டைப்படகாக ஆக்கிக் கொண்டு விட்டார்.

இவர்கள் மட்டுமல்ல இங்கே அடிக்கடி தலைகாட்டும் ஒரு வட நாட்டு பொய்யர் தலைவர் ஒருவரும் மூக்கறுபட்டுள்ளார். எதற்கெடுத்தாலும் வன்முறையை தூண்டிவிடும் பாட்டாளி மக்கள் கட்சி இம்முறை காணாமற்போய் விட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

# சதை உண்ணும் பற்றீரியா அமெரிக்காவிலும் தாக்கம்

(வாஷிங்டன்)

மனிதச்சதையை உண்ணும் பற்றீரியா தாக்கம் தமது நாட்டிலும் கண்டறியப்பட்டுள்ளதாக அமெரிக்கா நோர்வோக் வைத்தியசாலை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இப்பற்றீரியா தொற்றிய ஆண் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகவும் இவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் உள்ள பொது சுகாதார ஆய்வுகூட சேவை கடந்த மாதம் மேற்கொண்ட ஆய்விலிருந்தே இவ்வாறான பற்றீரியா மக்கள் மத்தியில் பரவி வருவது கண்டுபிடிக்கப்பட்டது. பிரிட்டனில் இப் பற்றீரியா தொற்றிய 15 பேரில் பதினொரு பேர் ஏற்கனவே மரணமடைந்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

# விமானப்படை தாக்குதல் 89 பாடசாலை சிறுவர் பலி

## அங்கோலாவில் கோரச்சம்பவம்

(லுவாண்டா)

அங்கோலாவில் யூனிட்டா கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டுவந்த அரச தரப்பு விமானப்படை விமானம் ஒன்று பாடசாலை ஒன்றின் மீது தவறுதலாக நடத்திய தாக்குதலில் 89 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.

யூனிட்டா கிளர்ச்சியாளர்களுடன் போரிடும் அங்கோல அரசபடைகளுக்கு ஆதரவாக விமானப்படை விமானம் ஒன்று தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தவேளை இப் பாடசாலை மீது தவறுதலாக ரொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டு விட்டதாகவும் இச்சம்பவம் குறித்து ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைவதாகவும் அங்கோல பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

கடும் பனிமூட்டம் காணப்பட்டதனால் விமானத்திலிருந்த கருவிகளின் தவறான செயற்பாட்டினால் விமானி இப்பாடசாலையை தவறாக தாக்கிவிட்டார் என அமைச்சு குறிப்பிட்டது.

- தேசியப் பட்டியல் எம். பி ஒபேவன்ச

(கொழும்பு)

பாராளுமன்ற எம். பி.பதவியை இராஜினாமா செய்ய நான் விரும்பவில்லை. எனது பதவிக் காலம் முடியும்வரை நான் இருப்பேன். முதுகெலும்பை நிமிர்த்தி நடக்கவே விரும்புகிறேன் என ஐ. தே. க. தேசியப் பட்டியல் எம். பி காலிங்க ஒபேவன்ச தெரிவித்துள்ளார்.

நான் எவருக்காகவும் பணியாற்ற மாட்டேன். எனக்கு பிடித்த மாதிரியே நடப்பேன் எனவும் அவர் கூறினார்.

# விவசாய திணைக்கள வெற்றிடங்கள்

விவசாயதிணைக் களத்தில் அரச சேவையில் மத்தியதர தொழில் நுட்பசேவை III ஆம் வகுப்பு பதவிகள் மற்றும் இலங்கை விவசாய சேவையின் வகுப்பு II தரம் II க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் ஆகியவை தொடர்பான அரச வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை ஈழநாதம் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

## விளையாட்டுப் போட்டி

(தென்மராட்சி)

தேசிய சர்வோதயத்தின் கீழ் இயங்கும் சாவகச்சேரி உதவி அரசாங்கபிரிவில் அமைந்துள்ள கொடிகாமம் ஆங்கில பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனி பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பிரதேச இணைப்பாளர் செல்வி நா. சேனாதிராஜா அவர்களின் தலைமையில் இடம் பெறும். (86)

## இல்லப்போட்டி

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி இல்ல மெய்வல்லுனர் போட்டி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 06. 11

சனி இரவு

08.01 - லெப்ரினன்ட். கேணல் புலேந்திரன் /சாள்ஸ் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி 'கடல் காத்த காவலன்'

08.25 - நேயர் கடிதங்கள்

08.30 - செய்திகள்

08.40 - கவிதா நிகழ்வு 'புலரும்பொழுதுக்காய்'

1994. 06. [illegible]

ஞாயிறு காலை

07.02 - மாவீர வணக்கம்

07.15 - களத்தில் மலர்ந்தவை

07.30 - செய்திகள்

07.35 - பத்திரிகைச் செய்திகள்

07.40 - களத்தில் மலர்ந்த [illegible] நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# வழங்கிய உறுதி மொழிகளை ஊழியர் சங்கம் பேணவில்லை

## பல்கலை. உயரதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் சில ஊழியர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை செய்தனர்.

தொழில் நுட்பவியலாளர் தெரிவு தொடர்பான நிர்வாகத்தின் நடவடிக்கைகளைக் கண்டிக்கும் வகையிலேயே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டதாக இப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

ஆனால் மேற்படி விடயம் தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும்மேற்படி சங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது வழங்கிய உறுதி மொழிகளை ஊழியர் சங்கம் அனுசரிக்கவில்லை என்றும் மேற்படி தொழில் நுட்பவியலாளர் நியமனம் தொடர்பாக இவ்ஊழியர்சங்கம் எந்த வகையிலும் நியாயமற்ற பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஊழியர் சங்கம் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குரிய எந்த விதமான சட்ட திட்டங்களும் பல்கலைக்கழக நடைமுறையில் இல்லை என்றும் பல்கலைக்கழகத்தின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் மேற்படி நியமனம் தொடர்பாக பல்கலைக்கழக பேரவையின் முடிவுகளையே பல்கலைக்கழக நிர்வாகம் நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய வேலை நிறுத்தம் காரணமாக பல்கலைக்கழக அலுவல் சில பாதிப்படைந்த போதிலும் பல அதிகாரிகள் கடமைக்கு வந்திருந்தனர். (க)

## வைரவ புளியங்குளம் தடைமுகாம் நீக்கம்

(வவுனியா)

வவுனியா நிலைமைகாரணமாகவும் பொலிசாரின் விருப்பம் காரணமாகவும் வைரவ புளியங்குளம் வீதித் தடை முகாம் நீக்கப்பட்டு விட்டதாக வவுனியா பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். எனினும் இப்பகுதியில் பொலிஸ் ரோந்து நடைபெறும் என அவர் கூறினார்.

வவுனியாவின் ஏனைய பகுதிகளிலும் பொலிஸ் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. திடீர் சோதனைகளும் ஆங்காங்கே நடைபெறுகின்றன.

## விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி)

அல்வாய் வடக்கு றோ. க. பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பாடசாலை அதிபர் திரு. ஆ. வடிவேலு தலைமையில் பிற்பகல் 2. 00 மணிக்கு ஆரம்பமாகும். (யோ)

### தாண்டிக்குளம் ஊடாக

## வியாபாரிஒருவருக்கு 90பரல் மண்ணெய் அனுமதி

(கொழும்பு)

தாண்டிக்குளம் ஊடாக ஒரு தனி வியாபாரி 90 பீப்பாய் மண்ணெண்ணெய் எடுத்துச் செல்லலாம். வவுனியா அரச அதிபர் உயர் மட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்த அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம் என கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கையினால் வடக்கில் மண்ணெண்ணெய்யின் விலையில்வீழ்ச்சி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மண்ணெண்ணெய்யை எடுத்துச் செல்ல அனைத்து நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### அகதிகளுக்கு நிவாரணம் வழங்க

## இலங்கைச் செஞ்சிலுவைக்கு 30 லட்சம் ரூபா உதவி

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் அகதிகளாக்கப்பட்ட... ஸ்தானிகராலயத்தினூடாக வழங்கப்படவுள்ளதாகவும்...

## புக்காரா நோட்டம்

(குருநகர்)

சிறிலங்கா வான்படையைச் சேர்ந்த 'புக்காரா' குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று முன்தினம் 6.30 மணியளவில் வலிகாமம் வடக்கிலிருந்து மேற்கிற்கும் - மேற்கிலிருந்து தெற்கிற்குமாக பலதடவை வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது. (21)

### மாகாண

காட்டுவதாகவும் குற்றம் சாட்டினார்.

இதேபோன்ற ஒரு ஜனநாயக படுகொலையை தென் மாகாணசபையில் செய்ததாகவும் இதற்கு தென் மாகாண மக்கள் தகுந்த பாடம் கற்பித்தபோதும் மீண்டும் இதே போன்ற ஓர் சம்பவத்தில் ஈடுபடுவதாக மேலும் தெரிவித்துள்ளார்.

### மேல்

இவரது பதவி விலகல் கடிதம் நண்பகல் 1-30 மணிக்கு'ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியினால் பதவி நீக்கக் கடிதம் அனுப்பப்பட்டதாகவும் தெரியவருகின்றது-

இதே சமயம் தமது பதவி நீக்கத்திற்கான காரணத்தை தான் ஜனாதிபதியிம் கேட்டபோது அதற்கு அவர் பதில் தர மறுத்துவிட்டதாக திரு. சர்வானந்தா தெரிவித்தார்.

### வடமேல்

தாகவும், இது தொடர்பாக இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைகளில் விரைவில் தான் ஈடுபடப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

### முடிந்தால்

ட்டிய பாடத்தை ஐ. தே. கவினர் மறந்திருக்கமாட்டார்கள் என சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார். பத்திரிகை யொன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர்...

### யப்பானில்

தூதுவர் கூறியுள்ளார்.

ஆயினும் இது தொடர்பாக ஜனாதிபதி திரு டி. பி. விஜேதுங்காவிடமிருந்து இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

### புதிய

துங்கா பதவி நீக்கம் செய்துவிட்டு நேற்றுக் காலை டி. என். சுவாமிநாதனை நியமித்துள்ளார்.

### முல்லையில்

ர்ந்து மீண்டும் இரவு 10.30 மணியளவில் இப் பகுதிக்கு வந்த புக்காரா விமானம் பல தடவை வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது.

### வீரச்சாவு

வீரச்சாவடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இவரது வித்துடல் இன்று காலை 8. 00 மணிக்குமக்களின் அஞ்சலிக்காக இணுவில் மானிப்பாய் வீதியிலுள்ள சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் வைக்கப்பட்டு அங்கு வீரவணக்கக் கூட்டமும் நடைபெறும். பின்னர் அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும்.

### புலிகளின்

படைகளின் உதவியுடன் தொடர்ச்சியான தாக்குதல்களை நடாத்தி வருவதாகவும் நடவடிக்கைக் குழு அறிவித்துள்ளது.

மேலும் திருமலை, அம்பாறை பகுதிகளில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல்கள் இடம்...

சீரான வாழ்வைச் சிதைத்திட வந்த
சீதன அரக்கனைத் தீயிட்டு எரிப்போம்

# தமிழக முகாமில் அகதிகள் உண்ணாவிரதப் போராட்டம்

[சென்னை]

தமிழக முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் சிலகோரிக்கைகளை முன்வைத்துக் கடந்த வாரம் முதல் உண்ணாவிரதம் இருந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உண்ணாவிரதம் இருந்தோரில் சிலரது உடல்நிலை கவலைக் கிடமாக இருந்தமையால் அவர்கள் செங்கல்பட்டு பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உண்ணாவிரதிகள் தாம் முகாம்களுக்கு வெளியே சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படல் வேண்டும், தரமான உணவு வழங்கப்படல் வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்தே உண்ணாவிரதம் இருந்ததாகத் தெரியவந்துள்ளது.

இவர்களது உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து தற்போது முகாம்களில் தங்கியுள்ள அகதிகள் குற்றச் செயல்களில் ஈடுபடாத வகையில்மதிய வேளைகளில் வெளியே சென்று வரவும், பார்வையாளர் கொண்டு வரும் உணவை உண்ணலாம் எனவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தரமான உணவை வழங்கவும் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

# மேல்மாகாண முதலமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டு விரைவில் வரும்

## பிரேமரட்ணா தெரிவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணசபை முதலமைச்சருக்கு எதிரான முக்கிய குற்றச்சாட்டுகள் அடங்கிய கோவையொன்றை தான் இப்போது தயாரித்து வருவதாகவும் மிக விரைவில் இதனை மக்கள் முன்னிலையில்வைக்கப்போவதாகவும் மேல்மாகாணசபை முன்னாள்அமைச்சர் பிரேமரட்ண குணசேகர தெரிவித்துள்ளார்.

ஜனநாயக ஐக்கிய முன்னணியின் காமினி குழு உறுப்பினரான இவர் கடற்தொழில், சுகாதாரம் மற்றும் மகளிர் விவகார அமைச்சராக மேல்மாகாணசபை உறுப்பினராக கடமையாற்றியுள்ளார். இவரை மேல்மாகாண சபை முதல் அமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா பதவி நீக்கம் செய்தமைகுறிப்பிடத்தக்கது.

இவரின் குற்றச் சாட்டுகள் தற்போது சேகரிக்கப்பட்டு வருவதாகவும் முழு விபரமும் கிடைக்கப்பெற்றதும் பொது மக்கள் முன்னிலையில் தெரிவிக்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

### இனப்பிரச்சினையை

நீக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என்றும் இவர்கள் முன்வைத்துள்ள திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிலான தன்னாட்சி தான் இப்போதைய இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு அமைதிப் பாதையை நோக்கிச் செல்வதற்கான ஒரே வழி என்றும் இதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் ஆக்கபூர்வமான பதில்தரின் பேச்சுவார்த்தைக்கான வழி திறக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது-

இதேவேளை இந்த ஆண்...

## ஐ.தே.க. தேசிய பட்டியலில் மேலும் ஒருவர் பதவி ஏற்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக காமினி ஜெயவிக்கிரம பெரேரா சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

1967 ஆம் ஆண்டு ஐ.தே.க. கிரியல்ல நகரசபை உறுப்பினராகவும், 1977 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டு குருநாகல மாவட்ட அமைச்சராக 1987 ஆம் ஆண்டு வரை இருந்துள்ளார்.

1987 ஆம்ஆண்டில் இருந்து வடமேல்மாகாணசபை முதல் அமைச்சராக ஐந்து ஆண்டு...

# 30 லட்சம் ரூபா உதவி

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு வெளிநாட்டு உதவியாக முப்பது இலட்சம் ரூபா கிடைக்க இருப்பதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தலைவர் டி. பி. அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இவ் உதவி வெளிநாட்டு நிறுவனங்களால் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினூடாக வழங்கப்படவுள்ளதாகவும் இன்னும் இருவாரங்களில் இந்நிதி கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் வடக்கு கிழக்கு மக்களின் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை எனக் கூறப்படுவதில் எதுவித உண்மையும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

# பூநகரி ஆலங்கேணியில் பாலர் விளையாட்டுப்போட்டி

[யாழ்ப்பாணம்]

மேஜர் கந்தன், மேஜர் ரவி சங்கர் ஆகிய வீரமறவர்களின் நினைவையொட்டி பூநகரி-ஆலங்கேணி கந்தன் பாலர் பாடசாலை மைதானத்தில் நேற்று முன் தினம் பாலர்களுக்கான விளையாட்டுப் போட்டி ஒன்று நடைபெற்றது.

மேஜர் கந்தனின் தாயார் மங்கள விளக்கை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து இவ் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின. ஆரம்பத்தில் மாவட்டத் துணை அரசியல் பொறுப்பாளர் திரு. அல்வின் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இதைத் தொடர்ந்து அமைதி வணக்கமும் நடைபெற்றது.

தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. இறுதியில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மகளிர் அமைப்பின் வட்டப் பொறுப்பாளர் செல்வி யாழிசை, மாவட்ட துணை அரசியல்பொறுப்பாளர் திரு. அல்வின் ஆகியோர் உரை நிகழ்த்தினர். எதிர்காலத்தில் பல்துறைகளையும் வழி நடாத்தும் அறிவாளிகளாக இம் மாணவர்கள் வளர வேண்டும் என்று திரு. அல்வின் தமது உரையின் போது தெரிவித்தார். இதைத் தொடர்ந்து தேசியக் கொடி இறக்கலுடன் மேற்படி நிகழ்வு இடம் பெற்றது.


## விசேட அறிவித்தல்

12-06-1994-ல் ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய மண்டபத்தில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. வைத்திலிங்கம் அவர்களால் நடாத்தப்படுகின்ற நிர்வாகசபை தெரிவு கூட்டத்துக்கு ஆலய தர்மகர்த்தாக்களிடமோ அல்லது எங்களிடமோ எந்தவித அனுமதியும் பெறப்படவில்லை என்பதை அனைத்து அடியார்களுக்கும் உபயகாரர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

-இணை முகாமையாளர்கள்

(8528)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


துங்கா தெரிவித்தார். பத்திரிகை யொன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேல்மாகாண சபைக்கு மீண்டும் ஒரு தேர்தல் நடக்குமானால் இன்றுள்ளதைவிட மேலும் பல ஆசனங்களைப் பெறுவோம் என்றார்.

இதே வேளை கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்ணான்டோபிள்ளை பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கையில் மாகாணசபை ஆளுநர் கூட சுதந்திரமாக தனது கடமையை செய்ய முடியாது இருப்பதாகவும் இது மிகுந்த கவலையை தருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## விண்ணப்பிக்கலாம்

நாட்டுப் பொருள் வரித் திணைக்களத்தில் நாட்டுப் பொருள் வரி உதவிக் கண்காணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் சிறிலங்கா அரசினால் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 17-ம் திகதி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் நாட்டுப் பொருள் வரி ஆணையாளர், த. பெ.இல. 1417 ஹேமாஸ் கட்டடம் கொழும்பு -1 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இதற்கான மேலதிக விபரங்களை எமது ஈழநாதம் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.


யாழ். ஸ்ரீதரில்

புரூஸ்லீ நடித்த

GAME OF DEATH

தினசரி

பிற்பகல் 4.00மணி 6.00மணி

சனி, ஞாயிறு

காலை 10. 30 மணி

பிற்பகல் 4.00 மணி 6.00மணி

(சி- 9570)


பாறை பகுதிகளில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல்கள் இடம் பெறுவதாகவும் இதன்போது திருமலை மாவட்டத்தில் நான்கு பொலிசார் பலியானதாகவும், அம்பாறையில் சந்தைப் பகுதியில் நடைபெற்ற மோதலில் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது-

இதேவேளை, இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின்போது அரசியல் பேரம் பேசுவதில் தமக்குள்ள கூட்டுப் பலத்தைக் காட்டுவதே தொண்டமானும் அஷ்ரப்பும் இத் திட்டத்தை முன்வைத்ததன் காரணம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## பதவிக்குரிய

பயன்படுத்தி என்னை எனது பதவியிலிருந்து நீக்கிவிட்டதாகவும் என்னை பதவியை விட்டு விலகுமாறும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் பதவி விலக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இப்படி ஒரு பதவி நீக்கம் வரும் என நான் எதிர்பார்த்திருக்க வில்லை. ஏனெனில் பதவி நீக்கப்படக்கூடியளவிற்கு எந்த ஒரு தவறையும் நான்இழைத்ததாக எனக்குத் தெரியவில்லை.

எனது பதவிக்குரிய மரியாதையை ஜனாதிபதி எனக்குக் கொடுக்கவில்லை. ஒரு பியோனுக்கு எழுதுவது போல் ஒரு வரியில் உன்னைப் பதவியிலிருந்து தள்ளுகிறேன் என்று ஒரு வரியில் மட்டுமே எழுதியுள்ளார்.

1988 இல் நான் எனது பதவியில் இருந்து ஓய்வு பெற்றேன். அப்போ திரு. ஜே. ஆர்.ஜெயவர்த்தனா என்னை அழைத்து எங்களுக்கு இந்த பதவிக்கு நல்லஒருவர்தேவை. எனவே நீங்கள்தான் இதனை ஏற்க வேண்டும் எனக் கூறி இப் பதவியை எனக்கு வழங்கினார். அப்போ மாகாண ஆளுநர் பதவியிலிருந்தால் ஏதாவது செய்யலாம் என நினைத்தேன். ஆனால் முடியவில்லை.

இன்றைய அரசு தான் விரும்பியபடி காரணம் எதுவுமே கூறாது ஒருவரை தாம் நினைத்தவுடன் பதவியிலிருந்துதூக்கி எறியலாம்என்றால் விசாரணைகளை மேற்கொள்வதற்கென்று ஏன் அமைப்புகள் இருத்தல் வேண்டும்? ஜனாதிபதி தான் நினைத்தபடியே எல்லாவற்றையுமே செய்யலாமே.

மாகாண சபையில் முதல்வருக்கே அதிகாரம் உண்டு எனவே அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே அவரது கட்சியை சேர்ந்த உறுப்பினரைப் பதவி விலக்கும் கடிதத்தில் கையொப்பம் இட்டேன் கட்சியினருக்கு ஒருவரது நடவடிக்கைகளில் நம்பிக்கையீனம் ஏற்பட்டால் அவர் தொடர்ந்து பதவிவகிக்க முடியாது. அந்தவகையிலேயே பதவி நீக்கப்பட்டார் அதலை விசாரிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. ஏனெனில் அது முதலமைச்சரின் விருப்பத்தின்படியே நடைபெற்றது அதில் தவறேதும் இல்லை.

நான் கடந்த ஆறு ஆண்டுகளாக இப்பதவியைவகித்து வருகின்றேன். அக்காலத்தில் இருபக்கத்திற்கும் நடு நிலைமையாளனாக இருந்து அவர்களுக்கான புத்திமதிகளை கூறி சிறப்பாக ஒற்றுமையாக செயற்படுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டேன் அதுதான் எனது விருப்பமாக இருந்தது அங்கு தனிப்பட்ட முறையில் இருந்து எதனையும் செய்ய முடியாது ஒற்றுமையாக இருந்துதான் எதையாவது செய்ய முடியும்.

இனிமேல் எந்த ஒரு அரச பதவியையும் நான் வகிக்கப் போவதில்லை ஏனெனில் இப்படியான ஒரு கௌரவமான பதவியில் இருந்த என்னை அப்பதவிக்குகந்த மதிப்பு கூட கொடுக்காது விலத்துவதென்றால் இனி மேலும் எப்படி இவர்கள் வழங்கும் பதவியை ஏற்பதுஅது சாத்தியப்படாத ஒன்று என்றார்.

1967 ஆம் ஆண்டு ஐ.தே.க. கிரியல்ல நகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட இவர் 1973 ஆம் ஆண்டு கடுகம்பொல தேர்தல் தொகுதி ஐ. தே. க. அமைப்பாளராக

வடமேல்மாகாணசபை முதல் அமைச்சராக ஐந்து ஆண்டுகள் இருந்த அவர் அம் மாகாணசபை எதிர்க் கட்சித் தலைவராக பதவி வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்குபடைமுகாம்களை சூழ புலிகளின் நிலைகள்

யாழ் குடாநாட்டிலும், ஆனையிறவு, முல்லைத்தீவு பகுதிகளிலும் இராணுவ முகாம்களைச் சுற்றி விடுதலைப் புலிகள் பலமான நிலைகளை அமைத்து வருவதாக இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

விமானத்தாக்குதலுக்கும் ஆட்லறி தாக்குதலுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் பலமான பதுங்கு குழிகளை புலிகள் அமைக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை புலிகள் மன்னாரிலும் தீவின் மேற்குப் புறமும் தாக்குதல்நடத்தலாம் என இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## மந்திரிசபை

மைக் காலத்தில் ஏற்படவுள்ள அமைச்சரவை விரிவாக்கத்தினால் அமைச்சர்களின் தொகை 86 ஆக அதிகரிக்கவுள்ளது. இதனால் அமைச்சுக்குரிய நிர்வாக செலவினம் அதிகரிக்கும் என குறிப்பிடப்படுகிறது.

மாதாந்தம் ஒவ்வொரு அமைச்சரினதும் பாதுகாப்பு மற்றும் நிர்வாக செலவுக்காக இரண்டு லட்சத்து எண்பத்தையாயிரம் ரூபாதேவைப்படுகிறது மந்திரிசபை உறுப்பினர் 86 ஆக அதிகரித்தால் மாதாந்தம் இதற்கென இருநூற்றி பதினாறு கோடி ரூபா தேவை எனவும் கூறப்படுகிறது. இதனால் அரசாங்கம் பெரிய நிதிநெருக்கடியொன்றை எதிர் கொள்ளும் என கூறப்படுகிறது.

அரசாங்கம் தேர்தலை முன்னிட்டு பல சலுகைகளையும், பல திட்டங்களையும் செயல்படுத்தும் அதேவேளை வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு பெரும்பணத்தை செலவிட நிர்ப்பந்திக்கப்படுகிறது.

இவ்வேளை மந்திரிசபை விஸ்தரிப்பால் அதிகரிக்கவிருக்கும் செலவினங்களை எவ்வாறு பெறுவது என திறைசேரி திக்கு முக்காடுவதாக தெரிவிக்கப்படுகிறது.


## உதவி ஆசிரியர்கள் தேவை

ஈழநாதம் பத்திரிகைக்கு உதவி ஆசிரியர்கள் தேவை. அனுபவசாலிகள், ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 20-06-94 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு நேரில் வரவும். கல்விச் சான்றிதழ்கள், தகைமைச் சான்றிதழ்களையும் எடுத்துவரவும்.

சம்பளம் திறமை, அனுபவம் என்பனவற்றின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும்.

முகவரி:-

31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.